

# ...க் காவலர் கதை

விக்கிரமன்★

செல்வி பதிப்பகம்

V211.P.
N97.
215734

105

# காஞ்சிக் காவலர் கதை

விக்கிரமன்

செல்வி பதிப்பகம்
காரைக்குடி

செல்வி—33
முதற்பதிப்பு—ஆகஸ்டு 61
உரிமை பதிவு செய்யப்பெற்றது.
இரண்டாம் பதிப்பு: டிசம்பர் 1989
மூன்றும் பதிப்பு: அக்டோபர் 1997

| | | |
|---|---|---|
| Title | : | Kanchi Kavalar Kaṭhai |
| Author | : | VIkraman |
| Language | : | Tamil |
| Subject | : | History |
| Book Size | : | Crown 8 Vo |
| Pages | : | 80 with Illustrations |
| Types | : | 11 point |
| Edition | : | First Edition August 1961<br>Second Edition, December 1989<br>Third Edition October 1997 |
| Publisher | : | Selvi Pathippaham<br>Karaikudi-630 001 |
| Price | : | Rs. 14.00 |
| Printers | : | Radha Printers<br>Sivakasi |

விலை ரூ 14.00

# முதற்பதிப்பின் முன்னுரை

ஒரு நாட்டின் வருங்கால முன்னேற்றம் கடந்த கால அஸ்திவாரத்தில் அமைந்திருக்கிறது. கடைக்கால் பலமாக இருந்தால் எழும் கட்டடம் வனப்புடன் இருக்கும்; அழியாது விளங்கும். தமிழ்நாட்டின் முற்கால வரலாறு உலகத்து எந்த நாட்டின் வரலாற்றுப் பெருமைக்கும் எள்ளளவும் குறைவுபட்டதன்று. ஆனால் பள்ளியில் படிக்கும் போது தமிழினத்தின் வரலாற்றைத் தொடர்பாகப் படிக்க வசதியிருப்பதில்லை. இளம்பருவத்திலே வரலாற்றுப் பெருமையை உணர்தல் தேவையுடையது. கல்வெட்டுக்களும், செப்புப்பட்டயங்களும், இலக்கியங்களும் இல்லாதிருந்தால், இப்போது கிடைத்திருக்கும் அளவுக்குக் கூடத் தொடர்பான சரித்திரம் கிடைத்திருக்காது. ஆராய்ச்சித் துறையில் மிக முயன்று சேகரித்துக் கொடுத்திருப்பவர்களுக்கு நாம் தலைவணங்கவேண்டும். குறிப்பாகப் பல்லவர் காலத்து வரலாற்றிற்கு மேல் நாட்டு ஆராய்ச்சியாளர் செய்திருக்கும் தொண்டைப் புகழ ஏடு போதா.

'பல்லவர்கள்'—மூவேந்தர்களுடன் சமமாக வைத்துப் பாராட்டத் தக்கவர்கள். அவர்கள் காலத்தில் சிற்பம் வளர்ந்தது, சித்திரம் வளர்ந்தது, தமிழிலக்கியம் வளர்ந்தது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றித் தீந்தமிழ்ப் பாடல்கள் பாடித் தெய்வ நம்பிக்கையை வளர்த்தனர். அந்த அற்புதக் காலத்தில் ஆண்ட மன்னர்களை பற்றி நாம் அறிதல் மிக மிக முக்கியம். காஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காவலர்களான பல்லவ மன்னர்களை இளைஞர்கள் அறியும் வண்ணம் சிறு நூல் வடிவில் எழுத வேண்டும் எனும் எண்ணம் பல ஆண்டு

களாக எனக்கு இருந்து வந்தது. சோழர்களின் ஆட்சியைக் குறித்து எழுதப்பட்ட 'பொற் காலத்தின் கதை'க்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டவுடன் 'காஞ்சிக் காவலரை' அறிமுகப்படுத்தும் துணிவு எனக்கு வளர்ந்தது. 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பிற்கு ஆசிரியராகப் பணியாற்றிய திரு சாண்டில்யன் அவர்கள் என்னை அப்பணியில் உற்சாக மூட்டித் தம் பத்திரிகையில் ஒரு பகுதி வெளியிட்டு ஆதரவளித்தார்கள். இப்போது செல்வி பதிப்பகத்து உரிமையாளர் திரு சிவராமன் அவர்கள் தக்க ஓவியங்களுடன் சிறப்பாக வெளியிட்டிருக்கிறார்கள்.

நான் பெரிதாக ஆராய்ந்து இந்த நூலை எழுதி விடவில்லை. மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் அதிகச் சிக்கலின்றி எழுதியிருக்கும் 'நடை' ஒன்றுதான் என் 'தொண்டு.' தமிழகத்தின் பழம்பெருமையை இன்றைய தலைமுறையினர் அறிய எனது தொண்டு பலனளிப்பது அது ஒன்றே போதும்.

வரலாற்றில் ஆராய்ச்சி என்பது ஒரு பெருங்கடல். அதன் ஆழம் எவராலும் உணர முடியாது. நான் கருத்து வேற்றுமை நிறைந்த இடங்களில் என் கருத்தை வெளியிடலாம். கூடியவரையில் பெரும்பாலான ஆராய்ச்சி அறிஞர்களின் வழியிலேயே சென்றுள்ளேன். பிழை இருப்பின் சுட்டிக் காட்டினால் தலைவணங்கி ஏற்கக் காத்திருக்கிறேன். அன்பர் ஓவியர் 'ஸுபா' அவர்களின் சித்திரங்களும், முத்தையா அச்சகத்தாரின் சிறந்த அச்சும் அமைப்பும் என் எழுத்துக்கு உறுதுணையாய் இருக்கின்றன.

சென்னை-33
18-8-1961

வணக்கம்

விக்கிரமன்

# இந்த நூல் வளர உறுதுணையாய் இருந்த நூல்கள்

Studies in Pallava History — Rev. S. J. Heras

Administration and Social Life under the Pallavas — C. Minakshi

S. I. I. Volumes

பல்லவர் சரித்திரம் — பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார்

ஆழ்வார்கள் காலநிலை — மு. ராகவ அய்யங்கார்

The Pallavas — Prof Dubreil

Pallavas Antiquities — ,,

Pallavas of Kanchi — R. Gopalan

சமணமும் தமிழும் — திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி

மகேந்திரவர்மன் — ,,

மூன்றும் நந்திவர்மன் — ,,

தென்னுட்டுப் போர்க்களங்கள் — திரு. கா. அப்பாத்துரை

பல்லவர் வரலாறு — டாக்டர் மா. இராசமாணிக்கனர்

சைவ சமய வளர்ச்சி — ,,

The Historical Sculptures of the Vaikunthaperumal Temple — C. Minakshi

சீனயாத்ரிகர் யுவான்ஸ்வாங் குறிப்புகள், நாயன்மார் ஆழ்வார் பாடல்கள், பெரிய புராணம், மற்றும் பல கட்டுரைகள்; ஓவியங்கள் ,தொல்புதைபொருள் ஆராய்ச்சித் துறையினரின் போட்டோக்கள், குறிப்புகள் முதலியன.

## இடைக்காலப் பல்லவமன்னர்களின் வரிசையும் அவர்கள் ஆண்ட காலமும்

| | | |
|---|---|---|
| 1. | சிம்மவிஷ்ணு | கி. பி. 575—615 |
| 2. | மகேந்திர வர்மன் (முதல்) | 615—630 |
| 3. | நரசிம்மவர்மன் (மாமல்லன்) (முதல்) | 630—668 |
| 4. | மகேந்திரவர்மன் (இரண்டாம்) | 668—670 |
| 5. | பரமேச்வர வர்மன் (முதல்) | 670—685 |
| 6. | இராசசிம்மன் (நரசிம்மவர்மன்; இரண்டாம்) | 685—705 |
| 7. | பரமேச்வர வர்மன் (இரண்டாம்) | 705—710 |
| 8. | நந்திவர்மன் (இரண்டாம்) [சிம்மவிஷ்ணுவின் சகோதரர் பீமவர்மன் பரம்பரையில் வந்த இரண்யவர்மனின் மகன்.] | 710—775 |
| 9. | தந்திவர்மன் | 775—825 |
| 10. | நந்திவர்மன் (மூன்றும்) | 825—850 |
| 11. | நிருபதுங்க வர்மன் | 850—882 |
| 12. | அபராஜித வர்மன் | 882—890 |



# காஞ்சிக் காவலர் கதை

## 1. சீர்மிகு சிம்மவிஷ்ணு

தம்பி! உனக்குக் கடிதம் எழுதவேண்டும் என்று பல நாட்களாக எண்ணியிருந்தேன். முன்பு நீ தஞ்சைக்குச் செல்கிறேன் என்று கூறியபோது சோழ மன்னர்களைப் பற்றிக் கூறினேன். நீ இப்போது காஞ்சிபுரம் செல்ல இருக்கிறாய் அன்றோ?

தொண்டை மண்டலத்துச் சிறந்த நகரங்களுள் தலையாயது காஞ்சி. தமிழகத்து நான்கு பெரும் பிரிவுகளைப் புகழ்ந்து பாடியுள்ளாரே கவிஞரொருவர், அந்தப் பாடல் உனக்குத் தெரியுமன்றோ?

சேர நாடென்றால் யானை நினைவுக்கு வரும். பாண்டிய நாடென்றால் முத்து. சோழவளநாட்டில் சோற்றுக்குப்பஞ்சமேது? ஆனால், தொண்டை நாடோ சான்றோர்களை உடையதாய் இருக்கிறது. சான்றோர்—அறிஞர்கள் நிறைந்திருந்தால் தான் நாட்டிற்குப் பெருமை அறிஞர்கள் கலையன்பர்கள்.

அத்தகைய கலை அன்பர்கள் வாழ்ந்த நகரம் காஞ்சி. காஞ்சி மாநகரத்தைக் குறித்துச் சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் உள்ளன. அந்தப் பழமையான நகரத்தின் அகன்ற வீதிகளைப் பற்றிப் புகழ்கின்றன இலக்கியங்கள். உயர்ந்த மாடமாளிகைகளைக் குறிப்பிடுகின்றன பழந் தமிழ் நூல்கள். கச்சி என்ற பெயர் கொண்ட காஞ்சியை

மணிமேகலை புகழ்கிறது. காஞ்சி மாநகரைச் சுற்றிக் கோட்டை இருந்ததாகவும், அதன் வடிவம் மயில்தோகை போன்றிருந்ததென்றும் சங்கநூல் கூறுகிறது.

'மலர்களில் சிறந்தது மல்லிகை. ஆண்களில் சிறந்தவர் திருமால்; பெண்களுள் சிறந்தவள் ரம்பை. நகரங்களுள் சிறந்தது காஞ்சி' என வடமொழிப் பாடலொன்று குறிப்பிடுகிறது.

நகரங்களுள் சிறந்த காஞ்சி தொண்டை மண்டலத்துக்குத் தலைநகராக இருந்ததுபோல் பல்லவர்களுக்கும் தலைநகரமாகத் திகழ்ந்தது.

பல்லவர்கள் என்ற பெயரைக் கூறும்போதே, தம்பி, சிற்பமும் சித்திரமும் கண்முன்னே நிற்கின்றன. மாமல்லபுரத்துக் கற்கோயில்கள் நம் முன் நடமிடுகின்றன. சித்தன்னவாசலில் உள்ள வண்ணச் சித்திரம் வாடாத நினைவை ஊட்டுகிறது. கலை என்றும் அழியாதது என்பதற்கு இதைவிடச் சான்று வேண்டுமா? கலையைப் படைத்தவர்கள் பெயரும் அழியாதது என்பதற்கு இதைவிடச் சான்று ஏது?

தமிழகத்தை ஆண்டவர்கள் மூவேந்தர்கள் என்றே நீ படித்திருப்பாய். அந்த மூன்று வேந்தர்களுடன் பல்லவர்கள் என்ற நான்காவது வேந்தரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். பல்லவர்கள் தமிழர்களா? தமிழ் மரபில் வந்தவர்களா-என நீ இப்போதே ஆராய்ச்சியில் புகுந்து குழம்ப வேண்டாம். அவர்கள் கலையை வளர்த்தார்களே அது ஒன்றே போதுமே அவர்கள் நமது அன்பர்கள் என்பதற்கு?

பல்லவர்கள் மாவீரர்கள். ஒருசமயம் சமுத்திரகுப்தன் வடநாட்டினின்று தெற்கு நோக்கி வந்தான். சமுத்திர குப்தன் என்றால் மாற்றரசர்கள் நடுநடுங்குவர். ஆனால்,

பல்லவ மன்னர்களுள் ஒருவரான விஷ்ணுகோபன் என்பவர் சமுத்திரகுப்தனை எதிர்த்துத் தீரத்துடன் போரிட்டார் என்று சாசனங்கள் கூறுகின்றன. வடநாட்டிலே பெரும் மன்னன் ஹர்ஷன். அவனைச் சாளுக்கிய மன்னன் புலகேசின் வென்று நர்மதை நதிக்கரையைத் தாண்டி வராதவாறு செய்தான். அத்தகைய வீரனான புலகேசினையும் புறமுதுகிட்டு ஓடச்செய்தான் நரசிம்மவர்மன். இப்படிப் பல கூறிக்கொண்டே செல்லலாம்.

தம்பி! மன்னருக்குப் பெருமை தருவது போர்க்களம் ஒன்றுதான் என்று எண்ணிவிடாதே. இந்த நாட்டில் எத்தனையோ போர்கள் நடைபெற்றிருக்கின்றன. அதனால் பல போர்க்களங்கள் தோன்றியிருக்கின்றன. அவற்றிலே வென்று பல மன்னர்கள் வாகை சூடியிருக்கின்றனர். ஆனால், அவர்கள் பெயரை யெல்லாம் நாம் கணப்பொழுதில் நினைவில் கொள்ள முடியாது. ஆனால், போர்க்

'அஜந்தா'—குகைகளின் தோற்றம்





'அஜந்தா'— அழியா ஓவியத்தில் ஆரணங்குகள்

களத்துப் புகலழைவிட அழியாப் புகழ்தரத்தக்கது அந்த மன்னரது கலை ஆர்வம். அந்தக் கலைஆர்வத்தால் எழுந்த படைப்புகளே கோயில்களும், மண்டபங்களும் சித்திரங்களும், சிற்பங்களும்!

தாஜ்மஹாலைக் கட்டிய ஷாஜஹானையும், பெருவுடையார் கோயில் அமைத்த ராசராசனையும் நாம் எளிதில் மறந்து விடுகிறோமா? அவை போன்றே கடற்கரைப் பட்டினமான மாமல்லபுரத்துச் சிற்பங்களைக் காணுந்தோறும் நாம் பல்லவ மன்னர்களை நினைக்கிறோம். காஞ்சி நகரத்துக் கைலாய நாதர் ஆலயத்தைக் காணுந்தோறும் பல்லவப் பேரரசர்களை மனத்தில் கொள்ளுகிறோம். கோயில்களும், கோயில்களிலுள்ள அற்புதச் சிற்பங்களும் பல்லவ மன்னர்களை அழியாது நினைக்கத் தூண்டுகின்றன.

தம்பி! அந்தப் பல்லவ மன்னர்கள் கலை வளர்த்த பெருமையைச் சுருக்கமாகக் கூற நான் எண்ணும்போதே என் நெஞ்சு நிமிர்கிறது. ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகள் காஞ்சியினின்று பல்லவர்கள் ஆட்சி புரிந்த அதிசயத்தைச் சொல்லத் துடிக்கும் நாவுக்கு நெஞ்சு ஆசி கூறுகிறது.

எழுநூறு ஆண்டுகள் பல்லவ மன்னர்கள் ஆண்டார்கள்! என்னல் எல்லாரையும் பற்றி உனக்குக் கூற

முடியவில்லையே. அவர்களுடைய வரலாறு முழுமையையும் முன்பே எவரும் எழுதி வைத்தார்களில்லையே. நல்ல வேளையாகச் செப்புப் பட்டயங்கள் பல கிடைத்தன. கல் வெட்டுக்களைக் கண்டெடுத்தனர். அவற்றைக் கொண்டு வரலாற்றுப் பேரறிஞர்கள் ஒருவகையாகப் பல்லவர்களைப் பற்றி அறிய வழி செய்தனர். அந்த அறிஞர்கள் எழுதிய பல நூல்களினின்று பல்லவர்கள் ஆண்ட காலத்தை முற்காலம், இடைக்காலம், பிற்காலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்க முடிந்தது.

பிற்காலப் பல்லவர்களுள் முதல் அரசர் சிம்மவிஷ்ணு. என்ன கம்பீரமான பெயர்! பெயரினின்றே அவர் ஒரு விஷ்ணு பக்தர் என்று கூறத் தோன்றுகிறதன்றோ? அப்போதெல்லாம் விஷ்ணு—சிவன் என்ற பேத உணர்ச்சி கிடையாது. அந்தக் காலத்தில் தமிழகத்தில் பௌத்தமும் சமணமும் சிறப்பான நிலையில் இருந்தன.

அக்காலத்தே—ஏறத்தாழ கிருஸ்து பிறந்து ஐநூற்று எழுபத்தைந் தாண்டுகள் இருக்கலாம்—சிம்மவிஷ்ணு இடைக் காலப் பல்லவர் பரம்பரையை உண்டாக்கிக் காஞ்சியில் அரியணை ஏறினர். அவர் சிறந்த கலை ரசிகர், அவருடைய உறவினர் கிருஷ்ண யாற்



மாமல்லபுரத்தில்—சிம்மவிஷ்ணுவின் சிற்பம்

றங்கரைக்கும், கோதாவரி நதிக்கும் இடைப்பட்ட பகுதிகளை ஆண்டிருந்திருக்கின்றனர். அப்போது சிம்மவிஷ்ணு அப்பகுதியில் சுற்றியலைந்து அறிந்திருக்கிருர்.

நடு இந்தியாவில் அஜந்தா என்ற இடம் இருக்கிறது. அடர்ந்த கானகத்திடையே பிறைபோன்று வளைந்த மலைச் சரிவில் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட மண்டபங்கள் அங்கு இருக்கின்றன. அந்தக் குகை மண்டபத்துள் உள்ள பாறைச் சுவர்களில் அற்புதமான வண்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இற்றைக்குச்சுமார் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வரையப்பட்ட ஓவியங்கள் அவை. இன்றும் வர்ண மெருகு குன்ருமல் அவை ஒளியுடன் திகழ்கின்றன. அப்படிப்பட்ட ஓவியங்கள் சிம்ம விஷ்ணுவின் காலத்தே எவ்விதம் இருந்திருக்கும்? புத்த பிக்ஷுக்களால் தீட்டப்பட்ட அந்த ஓவியங்களை சிம்மவிஷ்ணு கண்டிருக்க வேண்டும். அந்த ஓவியங்கள் நிறைந்த குகைகளைக் கண்டிருக்க வேண்டும். அதுபோன்று தன் நாட்டிலும் படைக்கக் கனவு கண்டிருக்க வேண்டும். அவன் கண்ட கனவு மலர் அவன் மகன் காலத்தில் அரும்புவிடத் தொடங்கியது. அவனுடைய பேரன் காலத்தில் பூத்து மணம் வீசியது. போகப்போக மலர் அழகொளி வீசித் திகழ்ந்தது

தம்பி! நீ மாமல்லபுரம் சென்ருயானுல் அங்கே ஆதி வராகப் பெருமாள் கோயில் என்ற கோயிலைக் காணலாம். மேற்குப் பகுதியில் உள்ள பாறையில் குடையப்பட்ட மண்டபம் அது. பிற்காலத்தில் முன்மண்டபங்கள் கட்டி, கதவுபோட்டு அதற்குத் தாழ்ப்பாளும் போட்டிருக்கிருர்கள். அந்தக் கோயிலுக்குள்ளே சிம்மவிஷ்ணு கம்பீரமாக



'மகேந்திரன்' கண்ட கனவு—பாறைகளை எல்லாம் இப்படி
மாற்றிவிட எண்ணினார்

அமர்ந்திருக்கிறார். அவர் அருகே பட்டத்து ராணிகள் அமர்ந்திருக்கின்றனர். சிலை வடிவில் தான்.

'சிம்மவிஷ்ணு போதாதிராஜன்' என்று வடமொழியில் அந்தச் சிலை அருகே செதுக்கப்பட்டிருக்கிறது.

சிம்மவிஷ்ணு போதாதிராஜன் காலத்தில்தான் வடமொழியில் சிறந்த புலவரான பாரவி வாழ்ந்து வந்தார். அவரைச் சிம்மவிஷ்ணு பெரிதும் ஆதரித்தார்.

இடைக்காலப் பல்லவர்களின் முதல் அரசர் கம்பீரமான தோற்றத்துடன் விளங்கினார். அவர் பெயருக்கு ஏற்ப வீரமுடன் திகழ்ந்தார். அவருக்குப் பின் வந்த அரசர்கள் பல்லவ நாட்டின் புகழை மிகமிக உயர்த்தினர்கள். அப்படி புகழ்க் கொடியை உயர்த்த வந்தவருள் தலைசிறந்தவர் சிம்மவிஷ்ணுவின் திருமகன் மகேந்திரவர்மராவர். அவர் பட்டமேறிய ஆண்டு கி. பி. 615.



# 2. இந்திர ஜாலம் மகேந்திர ஜாலம்

தம்பி ! உனக்கொரு முதுமொழி தெரியுமா ? கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது தமிழ் நாட்டில் பழமொழி. தமிழ் நாட்டில் அநேகமாகக் குடியிருக்கும் ஊரில் கோயில் இல்லாமல் எங்குமே காண இயலாது. கோயிலும், குளமும், சுற்றித் தெருக்களும் பூங்காவும் காண அழகாய்த்தான் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் கோயில்கள் பல நூற்றாண்டுகளாகத் திகழ்கின்றன. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே கோயில்கள் பல இருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

'அழகுடன் திகழும் பாம்பின் மீது தூங்காமல் தூங்கும் நீலமணி வண்ணனுடைய கோயில்' என விஷ்ணுவுக்குக் கோயில் இருந்ததைப்பற்றிச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

> **அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த**
> **மணிவண்ணன் கோட்டம் ...;**
>
> [ சிலப்பதிகாரம் நாடுகாண் காதை ]

சிவனுக்கு, முருகனுக்கு, பரசுராமருக்கு விஷ்ணுவுக்குக் கோயில்கள் இருந்தனவாம். அந்தப் பாடலைப் படித்துப் பார்.

> **" பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்,**
> **அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும் "**

"வால்வளைமேனி வாலியோன் கோயிலும்,
நீலமேனி நெடியோன் கோயிலும்..."

பிறவாயாக்கைப் பெரியோன் என்றால் சிவபிரான. அறுமுகச் செவ்வேள்—முருகன். வால்வளை என்றால் ஒளி யுடன்கூடிய சங்கு. வாலியோன்—அதுபோன்ற வெண் ணிறம் கொண்ட பரசுராமர்.

இவற்றைத் த்விர அருகதேவன் கோயிலும் ஏராளம்.

அந்தக் கோயில்கள் எல்லாம் மரத்தாலும், சுடு செங் கற்களாலுமே அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இப் போதும் மலையாள நாட்டுக் கோயில்கள் சில மரத்தால் கட்டப்பட்டிருப்பதைக் காணலாம். சிதம்பரத்திலுள்ள சபாநாயக மண்டபம் மரத்தினாலேயே அமைக்கப்பட்டி ருப்பதை அங்குக் காணலாம். அவை பழுதுபடா திருக்கவே செப்புத் தகடுகளாலும் பொன் தகடுகளாலும் வேயப்பட்டிருக்கின்றன.

கோச் செங்கணான் எனும் சோழமன்னன் விஷ்ணு வுக்கும், சிவனுக்கும் கோயில்கள் எடுத்ததைப் பற்றி திருமங்கை ஆழ்வார் என்ற திருமால் அடியவர் கூறியிருக் கிறார்: பல நூற்றாண்டுக ளுக்குப்பின் வாழ்ந்த செம்பி யன் மாதேவி எனும் சோழ மூதாட்டியார் கோயில்களைக் கருங்கற் கோயில்களாக மாற் றினார். அப்படி யென்றால் அதற்கு முன்பு செங்கற்க

சேர நாட்டுக் கோயில்



ளாலும், மரத்தாலும் தாமே கோயில்கள் இருந்திருக்க வேண்டும்.

மகேந்திர வர்மன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் கோயில்கள் அமைப்பதில் 'ஜால' மொன்று செய்ய விரும்பினார். செங்கல்லும், மரமும் எளிதில் அழியக் கூடியதால் அழியாத வகையில் கோயில் கட்டக் கனவு கண்டார்.

முன்பே அவர் தந்தை அவருக்கு ஆசையொன்றைத் தோற்றுவித்திருந்தார். அதுதான் பாறையைக் குடைந்து எடுப்பது. மகேந்திரவர்மனும் தம் இளம் வயதைப் பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பதில் கழித்திருக்க வேண்டும் கிருஷ்ணையாற்றங்கரையில், பாறைகளில் குடையப்பட்ட சில கோயில்களைக் கண்டிருக்கிறார். அஜந்தாக் குகைகளையும் கண்டிருக்கிறார். அவை அவர் நெஞ்சில் நெடு நாளாகச் சிறிது சிறிதாக வளர்ந்திருக்க வேண்டும்.

தம்பி! 'குடைவரை', 'ஒரே கல்' என்றெல்லாம் நான் கூறுவதற்கு முன்பு அவை குறித்து சிறு விளக்கம் கூறுவது நல்லது என எண்ணுகிறேன். குடைவரை என்றால்—வரை என்றால் மலை, மலையைக் குடைந்து எடுப்பதற்குக் குடைவ்ரை என்ற பெயர்.

வீட்டில் புத்தக அலமாரியைச் சிலர் சுவரில் குடைந்து எடுத்து அமைப்பார்கள். விளக்குமாடம் சுவரிலே குடையப்படுவதுதானே. அவை போன்றே பாறையை மெல்ல மெல்லச் செதுக்கி எடுத்துத் தூண்களுக்கு இடம் விட்டுத் தெய்வம் இருக்க அறை ஏற்படுத்தி சிறு கோயிலாக ஆக்குவதைக் குடைவரைக் கோயில் என்று சொல்வார்கள். அந்தக் குடைவரையில் தூண்கள் தனியே செய்து கொண்டுவந்து சேர்த்து அமைக்கப்படமாட்டா.



குடைவரைக் கோயில்—தளவனூரில் இருப்பது

தூண்கள் இருக்குமிடம் போக மிகுதியான இடங்கள் செதுக்கப்படும். குடையப்பட்ட அந்த இடத்தை மண்டபம் என்றும் கூறுவார்கள். இரண்டு பக்கத்துப் பாறைச் சுவரில் புராணக் கதைகளுள் முக்கியமான கட்டத்தைச் செதுக்கி வைப்பார்கள். அதை அர்த்த சிற்பம் அல்லது புடைச்சிற்பம் என்று கூறுவார்கள். குடைவரையில் குடையப்பட்ட பாகம் தவிர மற்ற இடங்கள் இயற்கையான பாறையாகத் திகழும். ஒரே கல்லாலான கோயில் என்பது: ஒரு கருங்கல் எப்படிச் செதுக்கப்பட்டு அழகிய சிற்பமாகிறதோ அதுபோன்று பெரிய பாறையை மேலே இருந்து செதுக்கிக் கோயிலாக ஆக்குவர். ஒட்டுப் பாறைகளே கிடையா.

மகேந்திர வர்மன் பட்டத்திற்கு வந்தவுடன் பாறையைக் குடைவதற்கு ஏற்ற இடத்திற்காக அலையலானார்.

கடைசியில் மண்டகப்பட்டு எனும் இடம் கிடைத்தது. அது இப்போதும் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது.

ஓரிடத்தில் வெற்றி ஏற்பட்டவுடன் மளமளவெனப் பல ஊர்களில் கல்லிலே ஜாலம் செய்யத் தொடங்கி விட்டார், மகேந்திரர்! அவரால் பாறைகளில் குடையப்பட்ட ஊர்களைக் கூறுகிறேன். உனக்கு வாய்ப்பும், வசதியும் ஏற்படும்போது நீ அந்த ஊர்களிலுள்ள குடைவரைக் கோயில்களைச் சென்று காணலாம். குடைவரைக் கோயில்கள் பொதுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாறைச் சரிவில் குடையப்பட்டன.

சென்னைக்கடுத்த மின்சார ரயில்வண்டி நிலையமான பல்லாவரம் எனும் பல்லவ புரத்திற்குக் கிழக்கே மூன்று கல் தொலைவில் மகேந்திரவர்மருடைய குடைவரைக் கோயில் ஒன்று இருக்கிறது. மற்றும் மாமண்டூர், மகேந்திரவாடி, வல்லம், திருக்கழுக்குன்றம், தளவனூர், சீயமங்கலம், குரங்கணிமுட்டம் போன்ற ஊர்களில் குடையப்பட்ட கோயில்களைக் காணலாம்.

அந்தக் காலத்தே மகேந்திரவர்மருடைய குடைவரைக் கோயில் மக்களிடத்தே புரட்சியை ஏற்படுத்தி விட்டன. பாறைகள் குடையப்பட்டன. இதென்ன இந்திர ஜாலமோ என எண்ணினர். மகேந்திரன் என்ன தேவ புருடனோ என எண்ணினர். ஏனென்றால் மகேந்திரர் அரசனாகமட்டும் திகழவில்லை. சாதாரண மக்களோடு மக்களாகவும் அலைந்துத் திரிந்திருக்கிறார். தன்னை விசித்திர சித்தன் என அழைத்துக்கொண்டிருக்கிறார் தன்னைக் குணபரன் எனக் கூறிக் கொண்டிருக்கிறார். தன்னைச் சததுருமல்லன் என்றும் சொல்லியிருக்கிறார்.



மகேந்திரனும் தேவியரும்—ஓர் அற்புதத்தைக் காட்டுகிறார் போலும்.
மாமல்லபுரம் ஆதிவராகர் குகை மண்டபத்திலுள்ள சிற்பங்கள்

மகேந்திரனுடைய இதுபோன்ற பட்டப் பெயர்கள் குடைவரைக் கோயில்களிலுள்ள தூண்களில் செதுக்கப் பட்டிருப்பதைக் காணலாம். அவருக்கிருந்த கலை ஆர்வம் சொல்லி முடியாதது. சைத்யம் (பௌத்த பிட்சுக்கள் வாழும் இடம்.)எனப்படும்குடைவரைக் கோயில் அமைத் தார். தன்னைச் சேத்தகாரி என அழைத்துக் கொண்டார்.

அந்தச் சேத்தகாரியின் நாடு திருச்சிராப்பள்ளியையும் தாண்டி இருந்தது. திருச்சிக்கடுத்து விளங்கும் புதுக்கோட்டைக்கு அணித்தே சித்தன்னவாசல் எனும் ஊர் உளது. அங்கே மகேந்திரவர்மரின் குகை மண்டபம் இருக்கிறது. அந்த மண்டபத்திலே அற்புத வண்ணச் சித்திரங்கள் உள்ளன. இப்பொழுது உதிர்ந்து, அழிந்த நிலையில் இருப்பினும், இருக்கும் அழகு கொண்டு, இருந்த சிறப்பை எண்ணி வியக்கலாம்.

நடன மங்கையர் ஓவியம், தடாகம், அதில் தாமரையும் இலைகளும், யானை அத்தடாகத்தில் இருப்பது, கந்தர்வர் மலர் பறிப்பது போன்ற ஓவியங்களைக் கண்டு இன்றெல்லாம் களிக்கலாம். அரசன், அரசி ஓவியம் உள்ளது. அவற்றை மகேந்திரரும், அவர் துணைவியும் என்று கூறுவர்.

அந்தச் சித்திரங்களைத் தீட்டியவரே மகேந்திரவர்மன் என்று கூறுவாரும் உளர். அவருக்குச் சித்திரக்காரப்புலி எனும் பட்டப்பெயர் இருப்பதால் அவர் ஓவியர் என்று திடமாகக் கூறலாம். சிற்பி, ஓவியர் மற்றும் என்ன வேண்டும்? அவர் ஓர் இசைக் கலைஞர். இப்போது, வீணையின் இன்னிசையில் மகிழ்கிறோமே அதைக் கண்டுபிடித்தவர் அவரே. அதற்குப் 'பரிவாதினி' எனப் பெயருமிட்டார். குடுமியாமலை எனும் சிற்றூர், புதுக்கோட்டை வட்டத்திலுள்ளது. அங்கு இசை சம்பந்தமான கல்வெட்டுகள் உள்ளன. அவற்றைச் செதுக்கியவர் அவரே. அதனால் அவர் இசையில் வல்லுநர் என அறியலாம். அவரது ஒரு பெயரான 'சங்கீர்ண ஜாதி' அதை உணர்த்துமே!

சிறந்த சிற்பியான மகேந்திரன், சிறந்த ஓவியரான மகேந்திரன், சிறந்த இசைப்புலவரான மகேந்திரன் சிறந்த நாடகாசிரியர் என்பதைக் கூறும்போது, தம்பி, நிச்சயம் நீ வியப்பாய்.

அந்த இந்திர ஜாலக்காரர் தன் வாழ்நாளில் மக்களோடு பழகிய அநுபவங்கொண்டு ஓர் அற்புதமான கேலி நாடகம் எழுதினர்.





## 3. மத்தவிலாஸன்

தம்பி! மகேந்திரவர்மன் பல்லவ நாட்டை விரிவு படுத்திச் சிறப்பாக ஆண்டதோடு தன் நாட்டு மக்களுக்குக் கலைச்சுவை ஏற்படச் செய்தார். மகாபாரதக் கதை மீது அவருக்கு மதிப்பு அதிகம். ஆங்காங்கே பாரதம் படிப்பதற்கும் ஏற்பாடு செய்தார். சிறந்த நாடக மொன்றை இயற்றி நாடு முழுமையும் நடிக்கச் செய்திருந் தார்.

'நாடகம்' என்றால் இப்போதுபோல் கட்டடம் ஒன்றி னுள் நடைபெறும் என எண்ணிவிடாதே. தெருக் கூத்தைப் பார்த்திருக்கிறாயா? சுற்றி மக்களெல்லாம் கூடி யிருக்க நடுவே கூத்து நடக்கும். கட்டியங்காரன் எனப் படும் சூத்திரதாரி நாடகத்தைப்பற்றி விளக்கி வருவான்.

மகேந்திரன் எழுதிய 'மத்தவிலாசப் பிரஹஸனம்' எனும் நாடகம் அந்தக் காலத்து வாழ்க்கையைச் சித்திரிப்ப தாக இருக்கிறது. பிரஹஸனம் என்றால் கேலி நிறைந்த

நாடகம் என்று பொருள். இந்த நாடகம் வடமொழியில் எழுதப்பெற்றது. பல நூறு ஆண்டுகள் மறைந்திருந்த இந்த நாடகச் சுவடி கேரள நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்தது.

மகேந்திரன் ஆண்ட காலத்தில் பல்லவ நாட்டில் பௌத்தம், சமணம், கபாலிகம், பாசுபதம், சைவம் எனும் மதங்கள் உயர்நிலையிலிருந்தன, அவரவர்கள் தங்கள் மதமே சிறந்தது என்று கூறிக்கொண்டனர். மதம் ஏற்பட்டபோது நல்ல குறிக்கோளுடன் ஏற்பட்டது. மதத்தை நிறுவியவர் ஏற்படுத்திய சட்டதிட்டங்கள் உயர்ந்த நோக்கத்துடன் விளங்கின. ஆனால் வரவர அதைக் கடைப்பிடித்து ஒழுகியவர்களின் ஒழுங்கீனங்களால் மதம் பல வீனப்பட்டது. ஒரு மதத்துக்கு மற்றொரு மதம் உயர்ந்தது தாழ்ந்தது எனும் பூசலும் போட்டியும் வேறு தோன்றிவிட்டன. சண்டை சச்சரவுகள் வேறு நிகழ்ந்தன. மதத்திலுள்ள முதன்மையாளர் அரசாங்க விஷயத்திலும் தலையிடலாயினர்.



‘சித்தன்ன வாசல்’-தூணிலுள்ள மகேந்திரவர்மன் வண்ண ஓவியம்

இவற்றை யெல்லாம் மகேந்திரன் கவனமாகக் கண்டு வந்திருக்கிறார். அவர்களுடைய குறைகளைச் சுட்டிக் காட்ட விரும்பினார். நகைச்சுவை



நாவுக்கரசர்

யுடன் அவற்றை விளக்க விரும்பினார். அதனால் மத்தவிலாச நாடகத்தை இயற்றினார். மத்தவிலாசம் என்றாலே பைத்தியக்காரனொருவனின் நடவடிக்கைகளைக் குறிப்பதெனவாகும்.

இந்த நாடகத்தில் புத்த பிக்ஷு ஒருவர் வருகிறார். சத்திய சோமன் என்னும் கபாலிகன் வருகிறான். அவனுடைய மனைவி பெயர் தேவசோமை சைவ சமயத்தைச் சேர்ந்த பாசுபதன் ஒருவன் வருகிறான். பைத்தியக்காரன் ஒருவன் தோன்றுகிறான். காஞ்சிமா நகரத்தில் இவர்கள் சந்திப்பது போன்று நாடகம் எழுதப்பட்டுள்ளது.

கபாலிகனும் அவனது மனைவியும் நன்றாகக் குடித்து விட்டு வருகிறார்கள். கள் குடிப்பது அப்போது தடுக்கப்

'சித்தன்னவாசல்'-தாமரைக் குளக் காட்சி வண்ண ஓவியம்





நடன மாது - அழியா ஓவியம் (சித்தன்ன வாசல்)

படவில்லை. கள்ளுக்கடை என்ற தனி இடம் ஒன்று இருக்கும். ஆனால், கள் குடித்து மதி மயங்கி வாழ்பவர்களை மக்கள் சமூகத்தில் குறைவாகவே மதிப்பர். அந்தக் கபாலிகன் கையில் மண்டை ஓடு ஒன்று இருக்கும். அது கபாலிக மதத்தின் சின்னம். கள்ளுக்கடையில் அந்த ஓட்டைக் கபாலிகன் தவறவிட்டு விடுகிறான். அதைத் தேடி கபாலிகனும் அவன் மனைவியும் வரும்போது எதிரே புத்த பிக்ஷு ஒருவர் வருகிறார். அவர் மேல் துணியில் ஏதோ ஒன்றை மறைத்து வருகிறார். கபாலிகனுக்கும், புத்த பிக்ஷுவுக்கும் எப்போதும் போட்டியும், தகராறும் உண்டு. அதனால் மண்டை ஓட்டுப் பாத்திரத்தை பிக்ஷுதான் திருடி விட்டார் என்று அவருடன் சண்டையிடச் செல்கிறார்கள். அவர்களைச் சமரசம் செய்து வைக்கப் பாசுபதன் வருகிறான். உண்மை என்னவென்றால் கபாலிகனுடைய மண்டை ஓட்டை நாயொன்று கவர்ந்து சென்றி

ருக்கிறது. அதைப் பைத்தியக்காரனொருவன் பறித்து எடுத்து வருகிறான். அவனைத் துரத்திப் பிடித்து அந்த மண்டை ஓட்டைப் பெறுகிறார்கள். பிறகு ஒருவருக் கொருவர் நடந்த விஷயங்களுக்காக மன்னிப்புக் கோரு கிறார்கள்.

நாடகச் சுருக்கம் இவ்வளவே. ஆனால், நாடகத்தி லுள்ள கதைப் பாத்திரங்கள் ஒருவருக்கொருவர் பேசும் போது ஒவ்வொரு உரையாடலிலும் பொதிந்திருக்கும் கருத் துக்கள் மிகச் சிறந்து, விழுந்து விழுந்து சிரிக்குமள விற்கு இருக்கும்.

அந்த நாடகத்தினின்று காஞ்சியில் உயர்ந்த மாட மாளிகைகள் இருந்தனவென்பதும், ஏகாம்பரர் கோயில் மிகவும் சிறப்புடன் விளங்கியதென்பதும் தெரியவரும். வாய்ப்பு நேரும்போது மத்தவிலாச நாடகத்தை நீ படித் தல் வேண்டும்.

ஃ ஃ ஃ

இந்த நாடகத்தை மகேந்திரவர்மன் எழுதியதோடு தன் பெயரையும் 'மத்தவிலாசன்' என்று சூட்டிக் கொண் டார். மாவண்டூர் கல்வெட்டில் இந்தப் பெயரைக் காண லாம். மாவண்டூர் காஞ்சீபுரத்திற்குத் தெற்கே இருக்கும்சிற்றூர்.


பாசுபதர்

மகேந்திரவர்மன் காலத்தவர் திருநாவுக்கரசர். 'அப்பர்' என்ற சிறப்புப் பெயருடன் கூடியவர் அவர். சிவபெருமானைத் துதித்து எழுதிய பல பாடல்களினின்று மகேந்திரன்

காலத்து நிலையைக் கண்டு கொள்ளலாம். சமணருடனும் பௌத்தருடனும் சைவ சமயத்தார் வாதிட்டு வென்ற காலம் அது, திருநாவுக்கரசர் மகேந்திரனின் மனத்தை மாற்றி சைவனாக ஆக்கினார் என்பது வழிவழிச் செய்தி.

மகேந்திரனுடைய உள்ளமறிந்தவர்களுக்கு, அவர் எல்லா மத நுட்பங்களையும் கற்றுத் தேர்ந்தவர் என்பது புலப்படும். எல்லா மதத்தையும் சமமாக மதிப்பவர் அவர்: சகல கலைகளை அறிந்து, வீரனாகவும் திகழ்ந்த மகேந்திரர் பெயர் உலகம் உள்ள அளவும் நிற்கும். அப்படி நிற்குமாறுதான் அவர் தனக்குப் பின் மாவீரனை விட்டுச் சென்றார். அந்த மாவீரன் உலகவீரர்கள் பலருடன் சமதையாக எண்ணத் தகுந்தவன்.



# 4. மாமல்லர்

**தம்பி!** மகேந்திர மாமன்னரின் நல்லாட்சியால் பல்லவப் பெருநாடு சிறப்படைந்தது. அவரது கலையுள்ளம் நல்லாட்சியை நடத்தியது. மக்கள் அமைதியுடன் வாழ்ந் தனர். என்றாலும் வடக்கே இருந்து சாளுக்கிய மன்னரின் படையெடுப்புத் தொல்லை இருந்துகொண்டிருந்தது.

சாளுக்கிய நாட்டில் அப்போது இரண்டாம் புலகேசின் எனும் மன்னன் ஆண்டு வந்தார். சாளுக்கிய நாட்டிற்கு வாதாபி எனும் ஊர் தலைநகர். அவ்வூர் இப்போதும் நிஜாம் நாட்டில் (ஆந்திரம்) இருக்கிறது. இரண்டாம் புலகேசின் சாளுக்கிய நாட்டை ஆண்டபோது வட நாட்டில் நர்மதை நதிக்கு வடக்கே உள்ள பகுதியை ஹர்ஷ வர்த்தனர் எனும் பேரரசர் ஆண்டு வந்தார். அவர் வட நாட்டு மற்றப் பகுதிகளை எளிதில் வென்றதுபோல், சாளுக்கிய நாட்டையும் வெல்லலாம் எனப் படையெடுத்து

வந்தார். புலகேசினினது படைகளின் தாக்குதலைத் தாங்க இயலாத ஹர்ஷர் புறமுதுகிட்டோடினர்.

புலகேசின் அடைந்த இந்த வெற்றியால் நாட்டின் பல திக்குகளிலும் தன் படைகளுடன் புறப்பட்டார். பல்லவ நாட்டை நோக்கி வந்தார். ஆனல், காஞ்சியின் பலம் பொருந்திய மதில்களைத் தாண்டிப் புலகேசினல் உள் நுழைய இயலவில்லை.

மகேந்திர வர்மனுக்குப் பின் அரியணை ஏறிய அவரது மகன் நரசிம்மவர்மன் (கி. பி. 630) சாளுக்கியர்களின் தீராத தொல்லையை ஒடுக்க எண்ணினர்.

நரசிம்ம வர்மனது பெயரை நாம் வரலாறு உள்ள அளவும் மறக்கமுடியாது தம்பி! அலெக்ஸாண்டர் எனறு படித்திருக்கிறோம். பிருத்விராஜன் என்று படித்திருக்கிறோம். அஞ்சாநெஞ்சன் சிவாஜி என்று பேசுகிறோம். நெபோலியன் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்—இவர்களை மாவீரர்கள் என்று உலகம் புகழ்கிறது. ஏடுகள் புகழ்கின்றன. பீமனையும், அர்ச்சுனனையும் மாவீரர்கள் என்று புராணக் கதைகூறுகிறது. அவர்களுடன் சமதையாக வைத்துப் போற்றத்தக்கவர் நரம்மசிவர்மன். அவருடையசிறப்புப் பெயரான மாமல்லன்' என்பதே அவரது தோள் வலிமையைக் குறிக்கும்.

வாதாபி கணபதி



தம்பி! சென்னைக்கருகிலுள்ள மகாபலிபுரம் எனும் ஊர் உனக்குத்


புலகேசின்

தெரியுமன்றோ? மாமல்லபுரம் மகாபலிபுரம் என மருவிய சோகக் கதையை இந்தச் சந்தர்ப்பத்தே கூறத்தான் வேண்டும்.

பண்டைய காத்தில் தலமி ழர்கள் வெளிநாட்டுடன் கடல் வாணிபம் செய்து வந் தனர். ஏராளமான கலங்கள் பண்டங்களை ஏற்றிச் செல் லும். கொண்டு வரும். அவற்றைப்பற்றிய விவரங்களைச் சங்க இலக்கியங்கள் வெகு சிறப்பாகப் புகழ்கின்றன. அப்படிக் கலங்கள் வந்து செல்லும் துறைமுகங்கள் தமிழ் நாட்டில் சில இருந்தன. பூம்புகார், நாகைப்பட்டினம், தொண்டி, கொற்கை போன்ற பட்டினங்களுடன் கடன் மல்லை என்ற பட்டினமும் சிறந்த துறைமுகம். தொண்டை நாட்டின் சிறந்த துறைமுகம் அது.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் ஆளத் தொடங்கியபோது கடன்மல்லை மீண்டும் சிறப் படைந்தது. அந்தக் கடற்கரைப் பட்டினத்தில் தான் மகேந்திரவர்மன் கலைக்கனவு கண்டார். பாறைச் சரிவு களைக் குடைய ஏற்ற இடம் எனக் கொண்டார். சிற் றுளிகள் 'கிளிங் கிளிங்' என ஒலி எழுப்பின. தந்தை கண்ட கனவை மகன் நிறைவேற்ற உறுதி கொண்டார். மகேந்திரன் தன் மகன் உள்ளம் உணர்ந்திருக்க வேண்டும். தன் மகனது கலைப் புலமையை அறிந்திருக்க வேண்டும். தன் மகனின் திறமையைத் தெரிந்திருக்க வேண்டும்.

அதனால் கடன்மல்லையில் ஏற்படும் சிற்ப புரிக்கு அழியாத பெயரொன்றைத் தர முடிவு செய்தார் மகேந்திர வர்மன். ‘மாமல்லபுரம்’ எனத் தன் மகனான நரசிம்மவர்மனது பெயரைச் சூட்டினார். மாவீரன், கலைஞன் பெயரால் ஏற்பட்ட அற்புத நகருக்கு எப்படியோ ‘மகாபலி’ யின் பெயர் வந்து ஒட்டிக் கொண்டது. அதுமட்டுமன்று, மாமல்லபுரத்திலுள்ள சிற்பங்கள் அனைத்திற்கும் எப்படியோ மகாபாரதக் கதையின் பெயர் வந்து சேர்ந்து கொண்டது.

மாமல்லரான நரசிம்மவர்மர் அரியணை ஏறியவுடன் புலகேசினின் தீராத தொல்லையைத் தீர்த்துவிட முடிவு செய்தார். புலகேசின் மீண்டும் பல்லவநாட்டின் மீது பெரும்படையுடன் சீறி வந்தார். காஞ்சிக்கு அருகே வரும் வரைக் காத்திருந்த நரசிம்மன் திடீரென்று புலகேசினின் மீது பாய்ந்தார். பரியலம், சூரமாரம், மணிமங்கலம் போன்ற இடங்களில் நடைபெற்ற போரில் புலிகேசின் தோற்று ஓடினார். மணிமங்கலம் எனும் ஊர் மட்டும் இப்போதும் செங்கல்பட்டு மாவட்டத்தில் வண்டலூருக்கருகே இருக்கிறது.

மேற்படி இடங்களில் தோற்றோடிய புலகேசினை மாமல்லன் அப்படியே விட்டுவிடவில்லை. சாளுக்கிய படைகளைத் தொடர்ந்து வாதாபிவரைச் சென்றார், அவருடன் படைத் தளபதி பரஞ்சோதியும் சென்றார். பரஞ்சோதி என்பவர்தான் சிவனடியார்களுள் ஒருவரான சிறுத்தொண்டராகப் பிறகு மாறியவர். கருத்தாட்டங்குடி எனும் ஊரினர். (அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்) அவரது வீரதீரத்தால் சாளுக்கியர் அடக்கப்பட்டனர். ஹர்ஷமகாசக்கரவர்த்தியை ஓட ஓட விரட்டிய

புலகேசினைப் பல்லவர்கள் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். வாதாபி நகரம் தீயிடப்பட்டது. மாடமாளிகைகள் தவிடுபொடியாயின. செல்வத்தைக் கவர்ந்தனர். இது பற்றிய விவரங்கள் செப்புப் பட்டயங்களில் பொறிக்கப் பட்டிருக்கின்றன. வாதாபியிலுள்ள பல்லவர்கள் நட்ட வெற்றித் தூணிலும் இம்மாபெரும் வெற்றி குறிக்கப்பட்டுள்ளதாம்.

வாதாபி நகரை வென்றதால் 'வாதாபி கொண்டவன்' எனும் சிறப்புப் பெயர் நரசிம்ம வர்மனுக்கு ஏற்பட்டது. பெரியபுராணத்திலும், பரஞ்சோதியின் வெற்றியைக் குறிப்பிட்டுள்ளார் சேக்கிழார் அடிகள். வாதாபியினின்று பரஞ்சோதி கொண்டு வந்தவற்றுள் தலையாயது பிள்ளையார் சிற்பமே. தமிழ்நாட்டிற்கே தும்பிக்கைக் கடவுள் அறிமுகமானது அன்று தொட்டு என்றே தோன்றுகிறது. அந்த விநாயகரைப் பரஞ்சோதி அடிகள் தன் ஊரில் பிரதிஷ்டை செய்தார்.

நரசிம்மவர்மனுக்கு இந்த படையெடுப்பின்போது இலங்கை மன்னனொருவரும் உதவியுள்ளார் எனத் தெரிய

கடல்கடந்து சென்று புகழ்நாட்டினர் பல்லவர்.



வருகிறது. ஈழத்து மன்னரான ஹம்பதத்தம் என்பார், இளரசனுன மானவன்மனைத் துரத்தி விட்டார். மானவன் மன் காஞ்சி வந்தடைந்து நரசிம்மவர்மரிடம் அடைக்கலம் புகுந்தார். புலகேசின் மீது படையெடுத்தபோது மானவன்மர் பெரும் உதவி செய்திருக்கிருர். அதற்குக் கைம் மாருக நரசிம்மவர்மன் படை உதவியுடன் மீண்டும் இலங்கை அரியணையில் மானவன்மன் ஏற வழி செய்தார்

தம்பி! இதைப்பற்றிக் கல்வெட்டுச் சான்று ஒன்றுளது. மானவன்மனுக்கு உதவியாக முதலில் பல்லவர் படைகள் ஈழத்திற்குச் சென்றன. ஆனல், போரில் தோல்வியே ஏற்பட்டது. வாதாபி கொண்ட வீரரான நரசிம்மருக்கு இது தாங்குமா? அதனுல் தன் படைப்பலம் முழுமையும் திரட்டிக் கலங்களில் ஏற்றி, வீரர்களுக்கு உற்சாகமூட்டித் தானும் அவர்களுடன் வருவது போன்று நம்புமாறு செய்தார் மாமல்லர், தம்முடன் மாமல்லர் இருக்கிருர் என்ற நினைவில் தைரியமாக வீரர்களும் போரிட்டனர். வெற்றியடைந்தனர். மாமல்லன் பெற்ற வெற்றியை முன்னுளில் இராமபிரான் பெற்ற வெற்றியோடு ஒப்பிடுகிறது ஒரு பட்டயம்.

வாதாபிப் போருக்குப் பிறகு மாமல்லர் பாண்டியர்களுடனும், கங்க நாட்டினருடனும் போர் நடத்தி வெற்றி கண்டார்.

தம்பி! மாமல்லர் தம் வாழ்நாளைப் போரில் மட்டுமே கழித்தார் என்று எண்ணி விடாதே. திருநாவுக்கரசு அடிகளும், ஞானசம்பந்தப் பெருமானும், திருமழிசை ஆழ்வாரும் மாமல்லர் காலத்து வாழ்ந்தவர்களே. சைவமும்

வைணவமும் சீரும் சிறப்புமடைந்தன. மாமல்லன் எந்தச் சமயத்தையும் வெறுப்பவனல்லர்.

தன் தந்தை விட்டபணியைத் தொடர்ந்து செய்யத் தொடங்கினுர் நரசிம்ம வர்மர்.

நரசிம்ம வர்மர் காலத்தில் தான் ஹுவான்ஸாங் எனும் சீனத்து யாத்ரிகர் தமிழ்நாடு வந்தது. தம்பி! ஹுவான்ஸாங் இந்தியா முழுவதும் சுற்றியவர். அவர் தான் கண்டறிந்தவற்றை அழகிய குறிப்புகளாக எழுதி வைத்துள்ளார். அவர் காஞ்சி நகருக்கு வந்திருக்கிருர். மாமல்லபுரத்தில் கலமேறி ஈழம் சென்றிருக்கிருர். காஞ்சி யின் வளப்பத்தைப் பற்றியும், சிறப்பைப் பற்றியும், வெகு அழகாக எழுதியிருக்கிருர். தமிழ் மக்களின் குணத்தைப் பாராட்டி யிருக்கிருர்.

சிறப்பான ஆட்சி அந்தச்சமயம் நிலவாதுபோனுல் வேற்று நாட்டினர் புகழ்ந்து எழுதி வைத்திருக்க முடியுமா?

சிறப்பான ஆட்சி நிலவாது போனுல் மாமல்லனுல் அற்புதச் சிற்பங்கள் பலவற்றைப் படைத்திருக்க முடியுா?



# 5. மாமல்லன் படைத்தவை

'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்ற முது மொழி ஒன்றுண்டு. அதை உண்மைப் படுத்துவதுபோல் சித்திரக்காரப் புலிக்குப் பிறந்த சிங்கம் விளங்கியது. எதைக் குறிப்பிடுகிறேன் என்று தெரிகிறதா தம்பி? சித்திரக்காரப் புலியாகிய மகேந்திர வர்மனின் திருக் குமாரர் நரசிம்மவர்மனின் பெருமையைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

மகேந்திரனின் கலை உள்ளம் அவர் மகனுக்கும் கைவந்திருந்தது. அவர் அமைத்த குடைவரைக் கோயில் களைப் போன்று நரசிம்மவர்வன் இன்னும் சிறந்த வகையில் குடைந்து குகை மண்டபங்களை அமைத்தார். மகேந்திர னின் குடைவரை ஆடம்பரமின்றிக் காணப்படும். நரசிம்ம னின் குகை மண்டபங்கள் சிற்ப வேலைப்பாடுகள் மிகுந்து காணப்படும். குகை மண்டபத்திலுள்ள தூண்களைப்

பார்த்தவுடன் இது நரசிம்ம வர்மன் செதுக்கியது என்று எளிதில் கண்டு விடலாம். அந்தத் தூண்களில் நிமிர்ந்து உட்கார்ந்திருக்கும் கர்ஜனை புரியும் சிங்கங்கள் செதுக்கப்

'பகீரதன் தவம்' பாறைச் சிற்பத் தொகுதியிலுள்ள சிற்பங்கள்.





'கணேசர் ரதம்' எனப்படும் ஒருவகைக் கோயில்.

பட்டிருக்கும். அவை தங்கள் தலைமீது தூண்களைத் தாங்கி யிருப்பதுபோல் தோன்றும். மண்டபத்து பக்கவாட்டுச் சுவரில் அழகிய சிற்பங்களைக் காணலாம். கரு அறையிலும் (கர்ப்பக்கிருஹம்) சிற்பங்கள் இருக்கும்.

நரசிம்மவர்மனது சிற்பப் பணியை மாமல்லபுரம் சென்றால் பெரிதும் கண்டு களிக்கலாம். குடைவரைக் கோயில்களை மட்டும் நரசிம்மன் அமைக்கவில்லை ஒரே கல்லாலான 'தேர்' எனப்படும் ஒரே கல் கோயிலைப் படைத்தார். மதிள் சிற்பம் எனப்படும் பெரும் பாறைப்புடைச் சிற்பங்களைப் படைத்தார்.

புடைச் சிற்பம் என்ன என்று முன்பே உனக்குக் கூறியிருக்கிறேன். பாறையில் தேவையான உருவங்களை அமைத்து மற்றப் பாகங்களைக் குடைந்து விடுவார்கள். காண்பதற்கு சிற்பங்கள் பாறையிலே ஒட்டவைத்தாற் போலிருக்கும். சிற்பத்தின் ஒரு பகுதியையே காணலாம். அதனால் அர்த்த சிற்பம் அல்லது புடைச் சிற்பம் என்று கூறுகிறோம். (அர்த்தம் என்றால் பாதி)

மாமல்லபுரத்திற்குச் சென்றால் புடைச் சிற்ப வரிசையில் அர்ஜுனன் தவம் எனப்படும் பகீரதன் தவம்

மதிள் சிற்பத்தைக் காணலாம். தேர்கள் எனப்படும் ஒரே கல்லாலான கோயில்கள் ஒன்பதைக் காணலாம். அவை யாவன: மாமல்லபுரத்தின் தென்கோடியில் உள்ள பஞ்சபாண்டவர் ரதம் எனப்படும் ஐந்து ரதங்கள். ஊரின் நடுவேயுள்ள கணேசர் ரதம். மேற்கேயுள்ள வளையங் குட்டை ரதம், பிடாரி ரதம் முதலியன.

குகை மண்டபத்தில் பல அற்புதக் கதைகள் செதுக்கப்பட்டுள்ள மண்டபங்கள் வராக மண்டபம், மகிஷாசுர மர்த்தனி மண்டபம், திரிவிக்கிரம மண்டபம், இராமானுஜ மண்டபம் முதலியன.

மாமல்லபுரம் வருகிறவர்கள் கருத்தைக் கவர்வது ஐந்து ரதங்கள் எனப்படும் பஞ்சபாண்டவர் ரதமே. தம்பி! இந்தச் சமயத்தில் உனக்கொன்று தெரிவிக்க விரும்புகிறேன். மாமல்லபுரத்தில் நுழைந்தவுடனேயே மகாபாரதக் கதைகளைக் கொண்டு பல இடங்களை வழிகாட்டி குறிப்பிடுவதைக் காணலாம். மகேந்திரவர்மன் காலத்திலேயே மகாபாரதக் கதை சிறப்புடன் பரவத் தொடங்கிவிட்டது உண்மைதான். ஆனால், அந்த மாபெரும் காவியத்திற்கும் அங்குள்ள சிற்பங்களுக்கும் எள்ளளவு தொடர்பும் இல்லை. வழி வழி வந்த

மாடக்கோயில் வகை.
ஐந்து ரதத்தொகுதியில் ஒரு கோயில்





எருமை வடிவில் வந்த அரக்கனை வென்ற சக்தி

யினால் இன்றும் வழிகாட்டிகள் அவ்வண்ணமே கூறு கிறார்கள். ஒவ்வொரு மண்டபமும், ஒவ்வொரு ஒரே கல் லாலான கோயிலும் தனித்தனி விதத்தில் பெருமை வாய்ந்தவை. தேர்கள், ரதங்கள் என்று கூறுகிறார்களே அவை தேர்களே அல்ல. தேர் என்றால் சக்கரம் எங்கே? ஒன்றிற்காவது சக்கரம் கிடையாது. ஆனால், அந்தப் பெயர் வந்து சேர்ந்ததற்குக் காரணம் இல்லாமலில்லை. முற்காலத்தில் கல்லால் கோயில்கள் அமைக்கப்படுவதற்கு முன்பு மரத்தாலும் மண்ணாலும் கோயில்கள் கட்டினர். அவை அதிக நாட்கள் நிலைபெற்று நிற்கா என அறிந்த தால் மகேந்திரவர்மன் பாறையைக் குடைந்தார். பழைய கோயில்களின் அமைப்பை அவ்வளவு எளிதில் விட்டுவிட இயலுமா? அவற்றின் மாதிரியை அப்படியே கல்லில் கொண்டுவர முயன்றார். அந்தப் பழைய கோயில்கள்

பெருங்கோயில், இளங்கோயில் மணிக்கோயில், கரக் கோயில், தூங்கானை மாடம் எனும் வகைப்பட்டன.

மாமல்லபுரத்திலுள்ள ஐந்துரதம் எனப்படும் கோயில்கள் ஐந்துவிதச் சிற்ப அமைப்பும் வடிவமுங் கொண்டிருப்பதை நீ காணலாம். தென்புறத்தில் வலமிருந்து இடமாகக் காண்கையில் முதலிலிருப்பதைத் தர்மராசர் தேர் எனக் கூறுகிறார்கள். ஆனால், இது சிவபிரானுக்கு என அமைக்கப்பட்டத் திருக்கோயிலாகும். இந்தக் கோயிலில் மூன்று மாடங்கள் உள்ளன. கீழிருந்து மேலே ஏறிச் செல்லப்படிக்கட்டு வசதி உள்ளது. மாடங்களின் நாற் பக்கத்துச்சுற்று வெளியிலும் சிவபிரானது பலவிதத்தோற்றங்கள் சிறப வடிவமாகச் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மேற்கு நோக்கியுள்ள மாடத்தில் சோமாஸ் கந்தரது உருவம் கம்பீரமாகத் திகழ்கிறது. சிவபிரான் அருகே உமாதேவியாரும், அவர் மடியில் முருகனுடன் அமர்ந்திருக்கும் திரு உரு. அகன்ற மார்பும், நிமிர்ந்த தோளும், உடைய சிவபிரான் திரு உரு அக்கால மக்களின் தோற்றத்தை நினைப்பூட்ட வல்லது.

இந்தக் கற்கோயிலைக் கண்டவுடன் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் ஆலயமே நினைவுக்கு வரும். அடிப்பாகத்தினின்று கொஞ்சங் கொஞ்சமாகக் குறுகி நான்கு பக்கமும் உச்சியை நோக்கிக் கூர்மையாகச் செல்லும். இதையே தான் பிற்காலத்தில் இராஜராஜ சோழன்தான் கட்டிய கட்டிய பெரு உடையார் கோயிலுக்கு முன்மாதிரியாகக் கொண்டிருப்பார் எனத் தோன்றுகிறது.

அடுத்து விளங்குவது பீமன் தேர் எனப்படுவது, மற்றவற்றினின்று இது வேறுபட்டு நீண்டசதுர வடிவமாய் இருப்பதால் இப்பெயர் கொடுத்தனரோ? இதன்



அரவணையில் அரிதுயில் புரியும் திருமால்

நீளம் நாற்பத்தைந்து அடி. அகலம் 25 அடி. உயரம் 26. அடி. இதனுடைய நான்கு தூண்களின் அடியில் சிங்கங்கள் உள்ளன. இதன் விமானம் கூண்டு வண்டியின் தோற்றத்தை நமக்கு நினைவூட்டுகிறது. இதைக் காணும் போது பௌத்த விகாரைப் போன்ற தோற்றமும் எழுகிறது. சிதம்பரத்து விமானமும் நினைவுக்கு வருகிறது.

இதற்கடுத்தது, அர்ச்சுனன் தேர் எனப்படுவது. அதற்கடுத்து விளங்குவதைத் திரௌபதித் தேர் என்கின்றனர். இரண்டும் ஒரே மேடையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனினும், இரண்டும் வெவ்வேறு தோற்றமுடையவை. அர்ச்சுனன் தேர் எனப்படும் கோயில் கிட்டத்தட்ட தர்மராஜர் தேரைப் போன்ற விமான அமைப்புடையது. இதனுடைய வெளிப்புறச் (பாறைச்) சுவரில் புடைச் சிற்பங்கள் உள்ளன. ஐராவதத்தில் காட்சிதரும் இந்திரனும், கருடனோடு திகழும் திருமாலும் காளையுடன் விளங்கும் கங்காதரனும் இங்கு அழகுடன் திகழ்வதைக் காணலாம். மற்றும் தேவ, தேவிகளின் களை சொட்டும் முகத்தையும், அவர்கள் நிற்கும் அழகையும் சிற்பி கல்லிலே வடித்திருப்பதைக் காணும் போது அந்தச் சிற்பங்கள் உயிர் பெற்றே வந்துவிட்டனவோ எனத் தோன்றும். இந்தக் கற்கோயிலுக்குப் பின்புறம் ஒரே கல்லாலான காளை அமைதியாக இருப்பதைக் காணலாம், முற்றும் முடிவற்ற நிலையில் செதுக்கப்பட்டிருப்பினும் அந்த உயிர்ச் சிற்பம் நமக்கு ஆயிரம் ஆண்டுக் கதைகள் கூறவல்லது (பக்கம்23).

அடுத்து விளங்கும் திரௌபதை ரதம் எனப்படும் கற்கோயில் அங்குள்ள மற்றக் கோயில்களுக்குள் அழகுடன் திகழ்கிறது. பெரும் சிற்ப அற்புதங்கள் இல்லை



என்றாலும் அதன் அமைப்பும், தோற்றமும் நம்மைக் கவர்கின்றன. அந்தக் கோயிலில் கூரை நான்கு பக்கமும் ஒரே வடிவினதாய்க் கூரைவீட்டின் தோற்றத்தை அளிக்கிறது. வழவழப்பாக மேற்பாகம் செதுக்கப்பட்டிருக்கிறது. மூன்றுபுற இளமாடத்தில் துர்க்கையின் சிலை. கோயிலின் கரு அறையிலும் துர்க்கை குடி கொண்டிருக்கிருள். அவளுக்கு நான்கு கரங்கள். அவள் காலடியிலே ஆடவர் இருவர் பணிவுடன் இருக்கிருர்கள். அவர்களுள் ஒருவர் கரத்தில் வாள். ஒருவேளை அவன் தன் தலையையே வெட்டிக் காளிக்குக் காணிக்கையாக்க முயல்கிருனே? மேலே பூதகணங்கள் பறந்து செல்கின்றனர். இந்தக் கோயில் எதிரே வடக்கு நோக்கிக் கர்ஜனை புரியும் சிங்கம் நிற்கிறது. இவற்றையெல்லாம் கண்டு பெண்ணுக்கு ஏற்றகோயில் என்று கருதியதால் திரௌபதையின் பெயரைச் சம்பந்தப்படுத்தி விட்டனர் போலும். ஆனல், இந்தக் கோயில் ஒன்றே போதும், இங்குள்ளவை பஞ்ச பாண்டவர் இரதமே அல்ல எனக் கொள்ள.

தெற்கு நோக்கி நிற்கும் தனிக்கோயிலை நகுலருக்கும் சகாதேவருக்கும் சேர்த்துக் கூறுகிருர்கள். ஆனல், இது 'தூங்கானை மாடம்' எனும் கோயில் அமைப்பைச் சேர்ந்தது. கோயில் முகப்பில் இரண்டு சிங்கத் தூண்கள் உள. யானை நிற்கும் போது பின்பக்கத்துத் தோற்றம் போன்ற வடிவமைப்புக் கொண்ட கோயிலைத் தூங்கானை மாடக் கோயில் என்பர். இந்தக்கோயில் அருகே யானையை நிறுத்தி வைத்திருப்பதைக் காணலாம்.

தம்பி! பல்லவர்கள் மிருகங்களைக் கல்லிலே செதுக்கும் திறமையைத் தனியே எடுத்துப் புகழ்வதில் சிறப்பிருக்கிறது.





# 6. சிவபக்தன் பரமேஸ்வரன்

'தம்பி! மாமல்லபுரத்திலுள்ள ஐந்து ரதங்களும் ஐந்து ரதங்களே அல்ல; அவை கோயில்கள் என்பதை உனக்குத் தெரிவித்தேன். அந்த ஐந்து கோயில்களுக்கு அருகிலுள்ள சிங்கம், யானை, காளை ஆகிய மூன்றையும் நீ கட்டாயம் காணல் வேண்டும். பல்லவர்கள் பிராணி களையும், மிருகங்களையும் உயிருள்ளவை போன்று தோற்றமளிக்கும் வண்ணம் செதுக்கியுள்ளனர்.

கண்கூடாக அர்ஜுனன் தவம் எனும் பெரும் மதிள் சிற்பத்தில் உள்ள யானையை நீ கண்டாயானால் அந்த இடத்தை விட்டே வரமாட்டாய். யானையின் குட்டிகள் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டுக்கொண்டு முன்னுக்கு வரும் காட்சியை மேல் நாட்டவர் வியக்கின்றனர். அந்தப் பெரிய மதிள் சிற்பத்தை அர்ஜுனன் தவம் என்று சிலரும், பகீரதன் தவம் என்று சிலரும் கூறுகிறார்கள். கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்த சகர—சாகரர்கள் கதை என்றும் கூறுபவர் உளர். அந்த ஆராய்ச்சியை நீ பெரியவனான பிறகு செய்துகொள்.

இந்தச் சிற்பத் தொகுதியில் உள்ள சிற்பங்களிலே நகைச்சுவை அளிக்கும் சிற்பம் பூனையின் தவம். பூனையார் தவம் செய்யும்போது எலிகள் அதைச் சுற்றிக் குதூ கலமாகக் கூத்தடிக்கின்றன. நரசிம்மவர்மன், தன் தந்தை மகேந்திர வர்மரைப் போன்று கலையுள்ளம் மிக்கவரா

யிருந்தபடியால்தான் இப்படிப்பட்ட கலைநுட்பம் நிறைந்த கதைச் சிற்பத்தை அவரால் படைக்க முடிந்தது. இந்தச் சிற்பத் தொகுதியைப் பற்றி இன்றைக்கெல்லாம் கூறிக்கொண்டிருக்கலாம்.

இவற்றைப் போன்ற கதைச் சிற்பங்கள் குடைவரைக் கோயில்களில் நரசிம்மவர்மன் காலத்தில் செதுக்கப்பட்டுள்ளன, உனக்குத்தான் திருமாலின் பத்து அவதாரங்களின் கதை தெரியும். பன்றி உருவெடுத்து பூமியைக் குடைந்துசென்ற திருமாலின் உரு மிக அற்புதமாகக் காட்சியளிக்கிறது ஒரு மண்டபத்தில். அந்தச் சிற்பத்தின் எதிரே மூவுலகத்தையும் ஈரடியால் அளந்த வாமனரின் கதை.

இந்தச் சிற்பத்தை வைத்துக் கொண்டுதானே என்னவோ மாமல்லபுரத்தை 'மகாபலிபுரம்' என்று கூறி விட்டனர். பெருவடிவெடுத்து வானத்துக்கும் பூமிக்குமாக நிற்கும் திருமாலின் திருக்கோலத்தைக் கல்லிலே காணுதல் இலேசா? மற்றொரு மண்டபத்தில் திருமால் ஆதிசேஷன் எனும் பாம்பின்மீது பள்ளி கொண்டிருக்கிறார். அந்தச் சிற்பத்திலே ஒருவேடிக்கை! ஒருவன் கையில் கதையுடன் தாக்க எத்தனிக்கிறான். மற்றொருவன் முதுகில் பட்ட அடி தாங்காது தடவிக் கொள்கிறான்; அந்தச் சிற்பத்தின் எதிரே தான் மகிஷாசுரமர்த்தனி சிற்பம். உலகத்திலே சிறந்த சிற்பம் அது எனக் கூறலாம். பாயும் சிங்கம். சீறி எழும் தேவி. அவளது வீரத்துக்கு ஏற்ற வண்ணம் ஒவ்வொரு கரத்திலும் ஒவ்வொரு ஆயுதம். எருதுத்தலையுடைய அரக்கன் தோற்று வீழ்ந்தான். இந்த அற்புதச் சிற்பத்தை இன்றைக்கெல்லாம் பார்த்த வண்ணமிருக்கலாம்.

நரசிம்மவர்மரின் சிற்பப் பணியைக் குறித்து எவ்வளவோ சொல்லிக்கொண்டே போகலாம். காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவ நாட்டை மிகச் சிறப்பாக நரசிம்மவர்மர் ஆண்டார். இவருக்கு மாமல்லன் எனும் பெயரைத் தவிர ஸ்ரீபரன், ஸ்ரீமேகன், ஸ்ரீநிதி, இரணசயன், அத்தியந்த ராமன், அமேயமாயன் நயநாங்குரன் எனும் சிறப்புப் பெயர்களும் இருந்தன.

ஒரு பெரும் மன்னருக்குப் பிறகு அந்த நாட்டை ஆள்பவர்கள் சிறப்பு வாய்ந்தவராக இருக்கமாட்டார்கள் எனச் சொல்லப்படுவதுண்டு. அதன்படி நரசிம்மவர்மனின் மகன், இரண்டாம் மகேந்திர வர்மன் எனும் பெயரில் இரண்டு ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். அவருக்குப் பிறகு பரமேஸ்வர வர்மன் பட்டமேறினார். அவருடைய பெயருக்கு ஏற்றபடியே அவர் சிவபிரான் மீது தணியாத பக்தியுடையவர். அவர் காலத்து நாட்டுமக்களுக்கும் சிவபக்தி அதிகமாயிருந்தது. தம்பி! அப்போது பாண்டிய நாட்டையும் நின்றசீர் நெடுமாறநாயனர் எனப்படும் ப்ாண்டிய மன்னர் ஆண்டு வந்தார். அவரும் சிறந்த சிவபக்தர் என்பதை நீ அறிவாய்.

பரமேஸ்வர வர்மன் கூரம் எனும் ஊரில் சிவபிரானுக்குக் கோயில் எடுப்பித்தார். கல்லாலான கோயில் தான். ஒரே கல்லாலான கோயில் அன்று. கற்களை ஒன்றன்மேல் ஒன்ருய் அடுக்கி வைக்கப்பட்ட கோயில். அந்த வகையில் இதை முதற் கோயில் என்றே கூறலாம்.

கணேசரதம் எனப்படும் ஒரே கல்லாலான கோயில் மாமல்லபுரத்தில் உள்ளது. இது பரமேஸ்வர வர்மனல் கட்டப்பட்டதே. இந்தக் கோயிலில் இப்போது பிள்ளையார் சிலை இருக்கிறது. ஆனல் இந்தக் கோயிலில் சிவபெரு

பிராணைப் பரமேஸ்வர வர்மன் பூசிப்பதை விளங்கும் கல்வெட்டுகளைக் காணலாம்.

இவர் காலத்தில் சாளுக்கிய நாட்டை விக்கிரமாதித்தன் என்பவர் ஆண்டு வந்தார். இவர் நரசிம்மவர்மரால் தோற்கடிக்கப்பட்ட இரண்டாம் புலகேசினின் மகன். விக்கிரமாதித்தன் பல்லவநாட்டை வெல்லப் பெரும் படையுடன் வந்தார். காஞ்சிக்கோட்டையைப் பரமேஸ்வர வர்மர் மிகப் பலமாகக் கட்டியிருந்தார். மதிள் மிக உயரமாக இருந்தது. கடக்க முடியாத அகழி இருந்தது. காஞ்சியை வெல்ல முடியாமல் விக்கிரமாதித்தன் தெற்கே உறையூர் நோக்கிச் சென்றார். பாண்டிய நாட்டில் நின்றசீர் நெடுமாறன் எனும் அரசர் அப்போது ஆண்டு வந்தார். அவருடன் சாளுக்கிய மன்னர் போரிட்டுத் தோற்றுத் திரும்பினார். பரமேஸ்வர வர்மனும் பெரும் படைகளுடன் காத்திருந்தார். பெருவளநல்லூர் எனும் இடத்தில் பெரும்போர் நடைபெற்றது. சாளுக்கியர் தோற்றோடினர்.

சாளுக்கியர்களுடன் இவ்வாறு ஏற்பட்ட போர் ஒவ்வொரு பல்லவ மன்னர் காலத்திலும் தொடர்ந்தது. அவற்றைக் கூர்ந்து கவனிக்கும்போது காஞ்சிக் காவலர்களான பல்லவர்கள் போர் வெறி பிடித்துப் பிற நாட்டின்மீது படையெடுத்துச் செல்லவில்லை என்பதையும் வந்த சண்டைக்கு அஞ்சிவிடாமல் வீரத்தை நிலைநாட்டினர் என்பதையும் அறியலாம். வடக்கிலிருந்து சாளுக்கியர்களின் படையெடுப்புதான் தொடர்ந்து நடந்திருக்கிறது.

சிறந்த சிவபக்தரான பரமேஸ்வர வர்மருக்கு அடுத்துப் பட்டமேறிய ராஜசிம்மன் தலைநகரான காஞ்சியில் அற்புதமான சிற்பங்கள் நிறைந்த கோயில் கட்டினார்,



# 7. கலை மன்னன் இராசசிம்மன்

தம்பி! பல்லவ மன்னர்களைக் கலைக்காவலர் என்றோம். கலைச்செல்வ நிறைந்தவர்கள் என்பதை அவர்கள் அமைத்த சிற்பத்தினின்று தெரிந்து கொண்டோம். சிற்பங்கள் அந்தக் காலச் சூழ்நிலையை விளக்குபவையாக இருந்தன. மண்டபம் எனப்படும் குடையப்பட்ட தளிகளையும், ஒரே பாறையால் ஆன கோயில்கள் எனப்படும் தேர்களையும் மகேந்திரனும், நரசிம்மவர்மனும் அமைத்தார்கள். கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிய கோயிலை முதல் பரமேஸ்வர வர்மன் படைத்தாலும், அவருக்குப் பின் வந்த இராசசிம்மன் தான் முழு உருக் கொடுத்தார். மாமல்லபுரத்திலேயே தம் கருத்தைச் செலுத்திவந்த நரசிம்மவர்மனைப் போலன்றி இராசசிம்மன், பல்லவத் தலைநகரான காஞ்சியிலும் தம் பணிகளைச் செய்தார்.

கலைச்சுவைக்குத் தெய்வ நம்பிக்கை பெரும் துணையா யிருக்கும். கலைவடிவங்கள் எல்லாம் கடவுள் தன்மை பெற்றவை. தமிழர்கள் தெய்வத்தோடு கலையைப் பிணைத்து இன்பங் கண்டவர்கள். தமிழகத்திலிருந்த ஐவகை நிலங்களுக்கும் ஒவ்வொரு தெய்வத்தை உரி யவராக்கி வணங்கியவர் தமிழர்களே! எண்தோள் ஈசர்க்கு எழில் மாடம் எழுபது செய்தவர் கோச்செங் கணான் எனும் சோழமன்னர்.

அதைப் போன்றே இராசசிம்மன் சிவனுக்கும், திருமாலுக்கும் கோயில் எடுப்பித்துத் தன் தெய்வ

இராசசிம்மன் கட்டிய கடற்கரைக்கோயில்.



215734

V211.P N97



'புலிக்குகை' எனப்படும் சிங்கமுகம் நிறைந்த குடைவரை மண்டபம்.

பக்தியை நிலைநாட்டினார். கடவுட் பக்தியுடன் தன் கலைச் சுவையையும் புலப்படுத்தி அழியாப்புகழ் பெற்றார்.

முதல் பரமேஸ்வர வர்மனுக்குப் பின் காஞ்சி அரியணையில் இராசசிம்மன் பட்டமேறியபோது பல்லவ நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சம் என்றால் என்ன என்பதைப் பற்றி உனக்கு நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை, பஞ்சம் எவ்வாறு உண்டாகிறது? இடையறாத போர்களினால்; கலகங்களினால்; மழை பெய்யாமல் ஏரி, குளம் ஆறு வறண்டு போவதால்.

இராசசிம்மன் காலத்தே வானம் பொய்த்தது. ஏரி, குளம் வறண்டன. பூமி பாளம்பாளமாக வெடித்தது. அதுமட்டுமா! பல்லவநாட்டில் அதற்குமுன்பு ஐம்பது ஆண்டுக்காலத்திலே மும்முறை பெரும் போர்கள் நடைபெற்றிருக்கின்றன. நரசிம்மவர்மன் காலத்தே புலகேசினுடன் நடைபெற்ற போர். பரமேஸ்வர

வர்மன் காலத்தே முதலாம் விக்கிரமாதித்தனின் பெரும் படையெடுப்பு. இவற்ருல் வறுமை தாண்டவமாடியது. தானியக் களஞ்சியம் வறண்டது. பெரும் யுத்தம் முடிந்தவுடனேயே இராசசிம்மன் பட்டமேறியபடியால் பஞ்சத்தைத் தீர்ப்பது சற்றுக் கடினமாகவே இருந்தது.

அந்தப் போது சைவப் பெரியார்கள் திருநாவுக்கரச அடிகளும், திருஞான சம்பந்தரும் வாழ்ந்திருக்கிருர்கள். 'வாசி தீரவே காசு நல்குவீர்' என அவர்கள் பாடியிருக்கிருர்கள், வாசி என்ருல் பஞ்சம். சிவபெருமான் பஞ்சம் தீர அருளினுர். இப் பஞ்சம் மூன்ருண்டுக் காலம் இருந்திருங்கிறது. அந்தக் காலத்தில் வச்சிர போதி எனும் பௌத்த மகான் காஞ்சி மாநகருக்கு வந்தார். அவர் சீன நாட்டிற்குச் செல்லவேண்டும் எனும் எண்ணமுடையவராயிருந்தார். இராசசிம்மன் அவரை வரவேற்றுப் பஞ்சம் தீர வழிகாட்டுமாறு வேண்டினுர். அவரும் இறைவனைத் தொழுது பஞ்சத்தைப் போக்கினுர்.

எப்படியோ மூன்ருண்டுகள் கொடும் பஞ்சம் பல்லவ நாட்டைப் பீடித்திருந்திருக்கிறது. மக்கள் காஞ்சியை விட்டு ஓடினர். அப்படி ஓடியவர்களுள் தண்டி எனும் சிறந்த வட மொழிப் புலவரும் ஒருவர். தாம் எழுதிய அவந்தி சுந்தரி கதை எனும் வடமொழி நூலில் காஞ்சியில் நேர்ந்த பஞ்சத்தை வர்ணித்துள்ளார்.

சாலைகள் எல்லாம் சீர்கெட்டனவாம். குடும்பங்கள் துன்பம் கண்டன. கற்ருேரும் மற்ருேரும் தடுமாறினர் என்று அந்தப்புலவரே வர்ணித்துள்ளார்.

பஞ்சம் தீர்ந்தது. இராசசிம்மன் ஆண்டவன் கருணையை வியந்தார். பழையபடி கடிகைகளும், கல்லூரிகளும் காஞ்சியில் ஏற்பட வழிசெய்தார்.

இராசசிம்மன் சிவபக்தி மிக்கவர். கைலாய நாதர் ஆலயம் என்று அற்புதக் கலைக் கோயில் காஞ்சியில் உள்ளது. தம்பி! நீ கட்டாயம் அந்தக் கோயிலைக் காணவேண்டும். கற்களை ஒன்றன் மேல் ஒன்று அடுக்கி அற்புதக் கோயிலை இராசசிம்மன் படைத்து விட்டார். இப்போது அந்தக் கோயில் காஞ்சியின் மேற்குக் கோடியில் இருக்கிறது. இராசசிம்மன் அமைத்த காலத்தே அது ஊரின் நடுவே இருந்தது.

அந்தக் கோயில் நீள் சதுரவடிவமுடையது. கோயிலுள் உள்ள திருச் சுற்றில் சிவனுடைய பலவிதத் தாண்டவங்களையும் சிற்ப வடிவில் வடித்திருப்பதைக் காணலாம். அங்குள்ள மாடங்களில் அழகிய வண்ண ஓவியங்கள் பல இருந்திருக்க வேண்டும். தம்பி! இன்று அவை முற்றிலும் அழிந்து வண்ண ஓவியம் இருந்ததற்குச் சான்றாக ஓரிரு கோடுகளே உள்ளன. இருபது ஆண்டுகளுக்கு முன்பு நான் அங்குச் சென்ற

காஞ்சி கைலாயநாதர் கோயில்





போது அழகிய முகங்களும், கண்களும், கைவிரல்களும் தீட்டப் பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். இன்று அவற்றைக் காணவில்லை. சிவபிரானது ஆனந்தத்

அரக்கரை வென்ற தேவி.
கைலாயநாதர் கோயில் சிற்பம்.

தாண்டவங்கள் நாட்டிய சாத்திர முறையோடு சிற்பமாகச் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இற்றைக்குச் சுமார் ஆயிரத்திருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட சிற்பங்கள் அவை என்பதை நீ மறந்துவிடக் கூடாது.



இறைவனின் கருவறைக்கு மேலே தான் விமானம் இருக்கிறது. கிட்டத்தட்ட

சிவதாண்டவம்-ஒருவகை
கைலாயநாதர் ஆலயச் சிற்பம்.

மாமல்லபுரத்திலுள்ள தர்மராசர் மண்டபம் போல் அமைப்பில் இருந்தாலும் அடிப்பாகம் அகலமாகிப் போகப் போகக் குறுகி புது

வித அமைப்புடன் திகழ்கிறது. விமான உச்சியில் உள்ள சிகரத்தின் கருவர்ணம்நம்மைக் கவர வல்லது. இந்தக் கோயிலின் கோபுர அமைப்பை நீ கண்டால் தஞ்சையில் உள்ள பெருவுடையார் கோயிலின் விமானம் இந்தத் தோற்றத்தில் அமைக்கப்பட்டிருப்பதை அறியலாம்.

இந்தக் கோயிலைக் கட்டிய இராசசிம்மன் அசரீரி கேட்டவன் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன, அந்தக் கதை சுவையானது. கைலாய நாதர் ஆலயத்தைக் கட்டி முடித்துக் கும்பாபிஷேகத்தின் முன் நாள் இராசசிம்மன் கனவில் சிவபெருமான் தோன்றினுர். இராசசிம்மன் குறிப்பிட்டிருந்த நாளன்று, தான் பக்த ஞெருவனின் கோயிலுக்குச் செல்லப் போவதால் வேறு நாள் குறிக்குமாறு கூறினுர். அந்தப் பக்தர்தான் பூசலார் எனப்படுவர். அவர் திருநின்ற ஊர் எனப் படும் ஊரினர். அவர் சிவபிரானுக்கு அற்புதக் கோயில் ஒன்றை மனத்திலேயே கட்டி முடித்தார். கும்பாபி டேகத்துக்கு இறைவனை வருமாறும் வேண்டினுர். மற் ருெருவர் கோயில் கட்டியிருப்பதாக அறிந்த இராசசிம்மன் திருநின்றவூரை அடைந்து, சிவபெருமான் கனவில் கூறிய கோயிலைத் தேடினுர். பூசலார் மனத்திலே கட்டிய கோயிலை அறிந்து பாராட்டி வணங்கினுர் பல்லவ மன்னர்.

இச் செய்தியைக் கல்வெட்டும் கூறுகிறது. பெரிய புராணம் எழுதிய சேக்கிழாரும் கூறுகிருர். இந்தக் கோயிலிலுள்ள கல்வெட்டுகளிலிருந்து இராசசிம்மனுக்குப் பல விருதுப் பெயர்கள் இருந்ததாகத் தெரிகிறது.

ரிஷபலாஞ்சனன், சங்கரபக்தன், ஸ்ரீ ஆகமப்பிரியன், சிவசூடாமணி, ஸ்ரீ வாத்யவித்யாதரன் என்பன இவரது சைவப்பற்றை எடுத்துக் கூறுகின்றன.

பனைமலை எனும் ஊரிலுள்ள கைலாயநாதர் ஆலயத்தை அமைத்தவரும் இவரே. இங்குள்ள வண்ண ஓவியம் இவருக்குள்ள ஓவியப் புலமையைத் தெரிவிக்கின்றது.

மாமல்லபுரத்திலுள்ள கடற்கரைக் கோயிலும் கைலாயநாதர் ஆலயத்தின் அமைப்பை ஒத்திருக்கின்றது. கடலலைகள் எப்போதும் வந்து தழுவிச் செல்லும் இடத்தே இருக்கும் இந்தக் கோயில் சிவ-விஷ்ணு இருவருக்கும் பொதுவாக இருக்கிறது. மேற்கு நோக்கியுள்ள கோயிலின் உள்ளே திருமால் துயிலுறும் நிலையில் பள்ளி கொண்டுள்ளார். கிழக்குத் திக்கு நோக்கியுள்ள கருவறையில் எட்டுப்பட்டை வடிவாய் உள்ள லிங்கம் இருக்கிறது.

இராசசிம்மன் காலத்தே இந்தக் கடற்கரைக் கோயில் நல்ல நிலையில் இருந்திருக்க வேண்டும். பிறகு நான்கு நூற்றாண்டுகள் கழிந்து அரசாண்ட இராஜராஜ சோழர் காலத்திலும் இக்கோயில் சிறப்பாக இருந்திருக்க வேண்டும். இப்போது மூன்றடுக்குள்ள விமானம், சிறிய விமானம் ஆக இரு விமானங்களுடன் காணப்



மாமல்லபுரத்துச் சிற்பம்

படுகிறது. சுற்றிலும் நின்ற நிலையிலுள்ள சிங்கங்கள் கம்பீரமாகத் திகழ்கின்றன.

தம்பி! நரசிம்ம வர்மன் காலத்தில் சிங்கம் அமைதியாக அமர்ந்திருந்தது. இராசசிம்மன் காலத்தில் அது பாயும் நிலையிலுள்ளது. இந்த அடையாளம் இராசசிம்மனது சிற்பப்பணியைக் குறிக்கும். மாமல்லபுரத்தில் கடற்கரையோரமாகச் சென்றால் சாலிவன்குப்பம் எனும் சிறு கிராமத்தில் சிங்கக் குகை எனும் மண்டபத்தைக் காணலாம். இதைப் புலிக்குகை என்று கூறுகிறார்கள். இவை புலியல்ல. வாய்திறந்து உறுமும் நிலையிலுள்ள சிங்கங்களே. இந்தக் குகைக்கு அருகே உள்ள மண்டபத்திற்கு அதிரணசண்டன் மண்டபம் என்று பெயர். அதிரணசண்டன் எனும் பெயர் இராசசிம்மனுக்கு உரியது.

இந்தச் சாலிவன் குப்பத்திற்குப் போகும் பாதையில் முகுந்தநாயனர் கோவில் என்ற கோயிலும் இராசசிம்மனால் கட்டப்பட்டதே ஆகும். மாமல்லபுரத்திற்குச் சென்று பார்த்தால் பல பூர்த்தியாகாத சிற்பங்களும். மண்டபங்களும் இருப்பது தெரியவரும். அவற்றைப் பூர்த்தி செய்யாமல் போனதன் காரணம் ஆராய்ச்சிக்கு ஏற்றது. இராசசிம்மன் அவற்றை முடிக்காமல் தானே புதிய பணிகளை மேற்கொண்டார். அவர் செய்த அரும் கலைப்பணிக்குச் சாட்சி கூறுகின்றன கடற்கரைக் கோயிலும் காஞ்சிக் கைலாய நாதர் ஆலயமும்.

இராசசிம்மன் சிறந்த இசை மேதையாக இருந்திருக்க வேண்டும்; ஓவியக் கலைஞராக இருந்திருக்க வேண்டும். நடனக் கலைப்புலவராக இருந்திருக்கவேண்டும். (வாத்ய வித்யாதரன், வீணா நாரதன் எனும் பெயர்கள் இவன் புலமைக்குச் சான்றுகூறுவன) இல்லையெனில் கைலாய நாதர் ஆலயம் போன்ற சிற்பக் கூடத்தை அமைத்திருக்க முடியாது.



# 8. பல்லவ மல்லன்

கைலாயநாதர் ஆலயம், கடற்கரைக்கோயில் போன்ற அற்புதமான கோயில்களைக் கட்டிய இராசசிம்மனுக்குப் பிறகு இரண்டாம் பரமேஸ்வரவர்மன் பட்டத்திற்கு வந்தார். கி. பி. 705 முதல் கி. பி. 710 வரை அவர் ஆண்டார். குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஏதும் அவர் ஆண்ட காலத்தில் இல்லை. அடுத்துப் பட்டம் ஏற, அவருக்கு மகனும் இல்லை. மரபு நீடிக்காமல் போனதால் பல்லவ ஆட்சியே அழிந்துவிடவில்லை. புதிய பல்லவர் மரபு தோன்றியது.

தம்பி! ஆரம்பத்திலே கூறினேனே நினைவிருக்கிறதா புதிய பல்லவ ஆட்சியின் முதல் மன்னர் சிம்மவிஷ்ணு என்று. அவருக்குப் பீமவர்மன் என்னும் தம்பி இருந்தார். பீமவர்மனுக்குப் புத்தவர்மன் எனும் மகன் இருந்தார். இப்படியாக அவருக்குச் சந்ததி தொடர்ந்து இருந்தது. அந்தப் பரம்பரையிலே இரண்ய வர்மன் என்பவர் வாழ்ந்து வந்தார். சிம்மவிஷ்ணுவின் பரம்பரையில் கடைசி அரசரான இரண்டாம் பரமேஸ்வர வர்மர் இறந்த பிறகு அடுத்து யார் பட்டத்துக்கு வருவது என்ற குழப்பம் நாட்டில் எழுந்தது. பரமேஸ்வரனுக்குச் சித்திர மாயன் எனும் மகன் இருந்ததாகக் கூறுகிறார்கள். அவன் சிறுவன் ஆதலால் ஆட்சிப் பொறுப்பை அவனிடம் ஒப்படைக்கவில்லை என்று கூறுகிறார்கள். அது உண்மையாயிருக்க முடியாது.

தெற்கே பாண்டிய மன்னர்கள் வலுப்பெற்றிருந்தார்கள். அவர்கள் எந்த நேரத்திலும் பல்லவ நாட்டைக் கவர்ந்துவிடலாம் எனும் அபாயம் இருந்தது. தம்பி! பல்லவர்கள் நாடு தெற்கே காவிரி நதி வரை பரவி இருந்தது. புதுக்கோட்டை வரையிலும் இருந்தற்குத் தக்க சான்றுகள் உள்ளன. சித்தன்னவாசல் புதுக்கோட்டை அருகே தானே இருக்கிறது.வடக்கே வடபெண்ணையாறு எல்லையாக இருந்தது.

வடக்கே சாளுக்கியர்கள் வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். வடமேற்கே புதிய நாடொன்று உருவாகியிருந்தது. இராட்டிரகூட நாடு என்று புதிய நாட்டிற்குப் பெயர்.

இப்படிப்பட்ட பொழுதில் காஞ்சியின் காவலர்-வலிமைமிக்கவராக இருக்கவேண்டும் என மக்கள் விரும்புவதில் வியப்பில்லை. நல்லரசு ஏற்படுவதில் கடிகையைச் சேர்ந்தவர்கள் ஆவலுடனிருந்தார்கள். நகரத்து வணிகர் அக்கறை செலுத்தினர். அமைச்சர்கள் கவனம் செலுத்தினர். அவர்கள் சித்திரமாயனைத் தக்க வாரிசாகக்கொள்ளவில்லை. அதனால், சித்திரமாயன் தகுதியற்றவனாக இருந்திருக்க வேண்டும்.

கடிகையாரும், வியாபாரிகளும், மூலப்பிரகிருதிகளும், அமைச்சர்களும் கலந்தாலோசித்தனர். பல்லவ பரம்பரையைச் சேர்ந்த இரண்ய வர்மனை அணுகுவது ஒன்றே அவர்களுக்குச் சரியெனப்பட்டது. இரண்ய வர்மன் முதிய பிராயத்தினர். அவர் தன்னால் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முடியாது எனக் கூறிவிட்டார்.

இரண்யவர்மனுக்கு நான்கு புதல்வர்கள். ஸ்ரீமல்லன், இரணமல்லன், சங்கிராம மல்லன், பல்லவ மல்லன் என நால்வர். பல்லவ சாம்ராஜ்யப் பொறுப்பை ஏற்குமாறு இரண்ய வர்மன் தன் ஒவ்வொரு மகனையும் அழைத்துக் கேட்டார். சிறுவர்கள், அவர்களுக்கு நாட்டை ஆளும் ஆசை இல்லை. அவர்களுள் மூவர் மறுத்துவிட்டனர். நான்காவது பிள்ளையான பல்லவ மல்லன் எனப்படும் பரமேச்வரன் 'நான் ஆளப் போவேன்' என்று ஒப்புக் கொண்டான்.

இரண்டாம் நந்திவர்மனும் தேவியாரும்



பல்லவ மல்லனே இரண்டாம் நந்திவர்மன் எனும் பட்டப்பெயர் தாங்கிக் காஞ்சியில் அரியணை ஏறினன்.

தம்பி! மாமல்லன் என்ற அரசனைப்பற்றி உனக்குத் தொடக்கத்திலேயே கூறினேன். இப்போது மற்ருெரு மல்லன். பல்லவ மல்லன் எனும் பெயரே வீரத்தைப் புலப்படுத்துகிறது. பல்லவநாடு பல கோட்டங்களாக அக்காலத்தே பிரிக்கப்பட்டிருந்தது. கோட்டம் என்பது இப்பொழுதுள்ள தாலுக்காவைப்போன்றது

எனக் கூறலாம். இரண்டாம் நந்திவர்மன் என்று கூறு கிறேனே முதல் நந்திவர்மன் யார் எனக் கேட்கலாம். சுமார் நான்காம் நூற்றாண்டில் பல்லவ பரம்பரையில் குமார விஷ்ணு எனும் மன்னர் இருந்தார். இடைக்காலப் பல்லவர் கள் என்று அந்த மன்னரிலிருந்து தொடங்கி சிம்மவிஷ்ணு வரையில் கூறுவர்.

பிற்காலப் பல்லவரது பரம்பரை சிம்ம விஷ்ணுவின் காலத்தே தொடங்குகிறது. சிம்மவிஷ்ணுவுக்கு முன்பு சிம்மவர்மன் ஆண்டார். அதற்கு முன்னர் ஆண்டவர் தான் முதலாம் நந்திவர்மன். அவர் காலம் கி. பி. 525-ம் ஆண்டு.

இரண்டாம் நந்திவர்மன் அரியணை ஏறியவுடனேயே சித்திரமாயனுடைய எதிர்ப்பினின்று மீள வேண்டியிருந் தது. பட்டத்திற்கான உள்நாட்டுக் கலகம் அது. வீர னை நந்திவர்மனுக்கு நாட்டு மக்கள் ஆதரவிருந்தது. அமைச்சர்கள் ஆதரவிருந்தது. படைத்தலைவராய் இருந்த உதயசந்திரன் என்பவர் துணை இருந்தது.

உதயசந்திரன் பெரும் வீரர். வேகவதி ஆற்றங் கரையிலிருந்த வில்வலம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். அவருடைய முன்னோர்கள் அனைவரும் பல்லவர்களின் படையில் சேர்ந்துழைத்தவர்கள். தம்பி! பெரும் வீரனை அர்ச்சுனனையும், பிருத்விராசனையும், அலெக்ஸாந்தரையும் நெப்போலியனையும் பற்றிப் படித்திருக்கிறீர் அல்லவா! உதயசந்திரன் வீரம் அவர்கள் எவர் வீரத்துக்கும் தாழ்ந்த தன்று. இரண்டாம் நந்திவர்மனுடைய ஆட்சி சிறந்து நடக்க உதயசந்திரனின் வீரம் மிக உதவியது.

உள்நாட்டுப் போரைத் தோற்றுவித்த சித்திரமாயனை யும் அவனது ஆதரவாளர்களையும் போரில் முறியடித்தார். கடைசியில் சித்திர்மாயனே உயிரிழக்க நேரிட்டது. அடுத்தபடியாக சாளுக்கியர்கள் வடக்கிலிருந்து தாக்கத் தெற்கிலிருந்து பாண்டியர்கள் படையெடுத்துவரப் பெரும் சோதனைக் காலம் ஏற்பட்டது. உதயசந்திரனது திறமை யும், வலிமையும் விரோதிகளை முறியடிக்க உதவின.

சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் காஞ்சி நகருக் குள் நுழைந்து விட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. ஆனால், காஞ்சியில் தங்கியிருந்து ஆளவில்லை. அந்தப் போதில் நந்திவர்மனும், உதயசந்திரனும் எங்குச் சென்றிருந்தார்கள் ?

இப்போது கும்பகோணம் என்று கூறப்படும் நகருக்கு முன்பு திருக்குடந்தை என்று பெயர். அந்த இடத் தின் வனப்பும் வளமும் நந்திவர்மனைக் கவர்ந்தன. நந்திபுரம் எனும் நகரை ஏற்படுத்தி அங்கு விண்ணகரம் ஒன்றைக் கட்டி, அதைச் சுற்றிக் கோட்டை கட் டித் தங்கியிருந்தார் நந்தி வர்மன். அப்போது பாண் டியர்கள் படையெடுத்து வந்து தாக்கினர். கோட் டையை முற்றுகையிட்ட னர். உதயசந்திரன் உத விக்கு அங்குச் செல்ல வேண்டி நேர்ந்தது. அப்



முக்தேச்வரர் கோயில்

பொழுது சாளுக்கியர்கள் காஞ்சி நகருக்குள் நுழைந்திருக்கலாம்.

சாளுக்கிய மன்னருக்குக் காஞ்சியை அடிமைப்படுத்தும் எண்ணம் தோன்றவில்லை. கைலாயநாதர் கோயிலின் தோற்றமும், அழகும் அவரைக் கவர்ந்துவிட்டன. முன்பு எப்போதோ அந்தக் கோயிலிலிருந்து கொள்ளையடித்துச் சென்ற செல்வங்களையும், அணிவகைகளையும் திருப்பிக் கொடுத்துவிட்டார். அதற்கு மாறாகக் காஞ்சியினின்று சிற்பிகளை உடன் அழைத்துச் சென்றுவிட்டார். பிற்காலத்தில் எல்லோராவில் கைலாயநாதர் ஆலயம் அமைக்க அந்தச் சிற்பியின் உதவி மிகத் தேவையாக இருந்தது.

பாண்டியர்களை முறியடித்த பிறகு, பல்லவ மன்னர் சாளுக்கியர்களையும் அடக்கினார். இராட்டிர கூடர்களின் படையெடுப்பைக் குறித்தும் சரித்திரம் கூறுகிறது. இரண்டாம் நந்திவர்மனை மணந்தவள் ஓர் இராட்டிர கூடப் பெண். ரேவா என்று பெயர். இவ்வாறு பட்டயம் கூறுகிறது. அதனால் இராட்டிரகூடர்களுடன் சமாதானமாகப் போயிருக்கலாம். இராட்டிரகூட மன்னன் வைரமேகன் காஞ்சிக்கு வந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. வைணவப் பெரியார் திருமங்கையாழ்வாரது பாடலிலும் வைரமேகனைப் பற்றிய குறிப்பு வருகிறது. அதனால் அமைதியான உறவு முறையுடன் வைரமேகன் காஞ்சிக்கு வந்திருக்கலாம். அமைதியான உறவுமுறையைத் திருமணத் தொடர்பு அன்றி வேறு வகையால் எவ்விதம் ஏற்படுத்த இயலும்?

தம்பி! காஞ்சியில் திருமாலுக்கு அற்புத சிற்ப வடிவங்கள் நிறைந்த கோயிலொன்று உள்ளது,

வைகுண்டப் பெருமாள் கோயில் என்று பெயர். கைலாய நாதர் கோயிலின் கோபுர அமைப்புடன் கூடியது. இராச சிம்மன் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் ஒரே இடத்தில் கோயிலமைத்தார். நந்திவர்மனே, கைலாயநாதர் கோயிலைப் போன்றே உருவ, வடிவ அமைப்புடன் வைகுண்டப் பெருமாள் கோயிலைக் கட்டினர்.

வைகுண்டப் பெருமாள் கோயிலின் உள் சுற்று மண்டபத்தில் பல்லவகுல சரித்திரம் முழுமையும் செதுக்கி வைத்திருப்பதைக் காணலாம். தொடர் சிற்பம் போல் வரிசையாகக் கதை கூறிவரும் அற்புதத்தை இன்றும் கண்டுகளிக்கலாம்.

பல்லவ குலத்தின் தொடக்க முதல் கதை தொடங்கி பிராகாரத்தின் மூன்று பக்கமும் தொடர்ந்து செல்கிறது. அந்தக் கதை கூறும் சிற்பம். இராசசிம்மன் வண்ண ஓவியத்தால் கோயிலை அழகுபடுத்தினர். நந்திவர்மன் கதைச் சிற்பங்களால் சிறப்பித்தார்.



அந்தத் தொடர்ச் சிற்பங்களினின்று பல்லவர்கள் கால சரித்திரத்தை ஒரு வகையாக அறிய முடிகிறது. நந்திவர்மனுடைய காலம் வரைச் சிற்பங்கள் அதில் காணலாம். மாமல்லபுரத்தில் அர்ஜுனன் தபம், மகிஷாசுர மர்த்தனி, திரிவிக்கிரம அவதாரம் போன்ற புடைச் சிற்பங்களைப்போல் நூற்றுக்கணக்கான சிற்பங்கள் கதை கூறுகின்றன. சபையில் மன்னர் கொலுவீற்றிருப்பதையும், போரையும், யானைமீது பவனியையும், குதிரை வீரர்களையும், நடனமாதர்

களையும், பட்டத்து ராணியையும் அந்தச் சிற்பங்களிலே காண முடிகிறது.

நந்திவர்ம பல்லவ மல்லன் வைணவ பக்தர், அவர் காலத்திய திருமங்கை ஆழ்வார் காஞ்சிக்கு வந்திருந்து அழகிய தமிழ்ப் பாசுரங்களைப் பாடியிருக்கிறார். தில்லைச் சிற்றம்பலத்திலுள்ள கோவிந்தராசர் சந்நிதியை அமைத்தவர் நந்தி வர்மனே.

நந்திவர்ம பல்லவ மல்லனின் பட்டத்து அரசியாரின் பெயர் ரேவா தேவி. அவள் இராட்டிரகூட மன்னர் வைரமேகனின் மகள் ஆவள். காஞ்சியிலுள்ள முக்தேச்வரர் ஆலயத்தை அவள் கட்டினாள் என்று கூறுகிறார்கள்.

நந்திவர்மன் காலத்தில் பல்லவர்களுடைய அரசாங்க முத்திரையில் ரிஷபம் பொறிக்கப்பட்டிருந்தது. கடுமுக வாத்யம் சமுத்ரகோஷம் எனும் இசைக்கருவிகள் நந்தி வர்மன் காலத்தில் வழங்கியவை.

நந்திவர்மன் சுமார் அறுபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கிறார். முதுமைப் பருவத்தில்கூட அவர் அங்க நாட்டினருடன் போர்புரிந்து 'உக்ரோதயம்' எனும் விலையுயர்ந்த ஆபரணத்தைக் கைப்பற்றினார்.

தம்பி! இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எப்படித் தெரிகின்றன என்று கேட்கிறாயா? அந்தக் காலத்து முக்கிய நிகழ்ச்சிகளைக் கல்வெட்டில் செதுக்கி வைப்பர். செப்புப் பட்டயங்களிலே பொறித்து வைப்பர். அரசர்கள் நடத்திய போரும், அதன் வெற்றியும் அந்தப் பட்டயங்களிலே காணக்கிடக்கலாம். ஆனால், அவை வடமொழியிலேயே

செதுக்கப்பட்டு வந்தன. இரண்டாம் நந்திவர்மன் காலத்திலிருந்து தமிழ்மொழியில் பட்டயங்களைத் தீட்டத் தொடங்கினார்கள்.

விரிவுபெற்ற பல்லவ நாட்டை ஆண்ட நந்திவர்மனுக்குத் தந்தி துர்க்கன் என்ற மகன் இருந்தான். இராட்டிரகூட மகள் ரேவா தேவிக்குப் பிறந்த மகன். அவனே அடுத்து அரியணை ஏறும் உரிமையுடையவன்.



## 9. நந்திவர்மனுக்குப் பிறகு

தம்பி! போரில் வெற்றியும் தோல்வியும் ஒரு மன்னர்க்கு எப்போதும் ஏற்படும். அதுதான் போரின் குணம். ஒரு நாடு எப்போதுமே எல்லாப் போர்களிலுமே வெற்றி பெற்றுக் கொண்டு வாழாது. முன்பு பல்லவர்க்கு வடக்கே சாளுக்கியர்களின் அபாயம் இருந்தது. இப்போது இராட்டிர கூடர்களின் புதுத் தொல்லையும் சேர்ந்து விட்டது.

இளம் வயதிலேயே அரியணை ஏறி நீண்ட காலம் ஆட்சி புரிந்த இரண்டாம் நந்திவர்மனுக்குப் பிறகு அவருடைய மகன் தந்திவர்மன் பட்ட மேறினார். தந்தி போத்தரையர், வைரமேகன் எனும் பல பெயர்களும் இவருக்கு உண்டு. 'வைரமேகன்' என்ற பெயரை வேறு எங்கோ கேள்விப் பட்டிருப்பதாக எண்ணுகிறாய் அன்றோ? ஆம்; வைர மேகன் இரண்டாம் நந்திவர்மன் காலத்தே காஞ்சி நகர்க்கு வந்த இராட்டிர கூட நாட்டரசர். திருமங்கை ஆழ்வார் அந்தப் போது காஞ்சியில் இருந்திருக்கிறார். இரண்டாம் நந்திவர்மன், வைரமேகனது மகள் ரேவாதேவியை மணம் புரிந்து கொண்டார் என்று முன்பு கூறினேன். ரேவாவுக்குப் பிறந்தவர் தான் தந்திவர்மன். 'வைரமேகன்' எனும் தன் பாட்டனாரின் பெயரைத் தானும் சூடிக் கொண்டார்.

இதுவரைப் பல்லவர் புகழ்பாடி அவர்கள் வெற்றியை மட்டும் கூறி வந்தேனே இப்போது பல்லவ குலத்திற்கு ஏற்பட்ட தோல்வியையும் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. அதனுல்தான் முதலிலேயே சொன்னேன் வெற்றியும் தோல்வியும் எப்போதும் நிலையாக நிற்கா என்று. தந்திவர்மன் பட்டமேறியவுடன் பாண்டியர்களுடனும், இரட்டர்களுடனும் போரிட வேண்டியிருந்தது. தென் எல்லையில் அப்போது பாண்டியர்கள் இருந்தார்கள். சோழர்கள் வலிவிழந்து சிற்றரசராக இருந்தார்கள். அவர்கள் தலைநகர் உறையூரினின்று பழையாறைக்கு மாறி இருந்தது,

இரட்டர்கள் நாட்டை அந்தப் போரில் மூன்றும் கோவிந்தன் என்பவர் ஆண்டு வந்தார். அவர் தந்தை துருவன் என்பவர். அந்த நாட்டுப் பட்டத்துரிமையில் பல்லவ மன்னன் தந்திவர்மன் தலையிட்டதால் துருவன் பல்லவ நாட்டின் மீதே படையெடுத்து வந்ததாகப் பட்டயங்கள் கூறுகின்றன. அவருக்குப் பிறகு வந்த மூன்றும் கோவிந்தன் என்பவரும் பெரும் படையுடன் பல்லவ நாட்டிற்குள்ளே நுழைந்து விட்டார்.

அதே போல் பாண்டிய மன்னர் வரகுணனுடன் போர் ஏற்பட்டது. அதிலும் பல்லவர்க்குத் தோல்வியே போரில் தோல்வி யுற்றதால் தந்திவர்மன் நாட்டை இழந்து விடவில்லை. உடன்படிக்கை முறையால் மாற்றுரிடமிருந்து தப்பி யிருக்க வேண்டும். அல்லது மீண்டும் போரிட்டு வென்றிருக்க வேண்டும். அதனுல் தந்திவர்மன் காலத்தே பல்லவ நாடு பிழைத்தது எனக் கூறலாம்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார் தந்திவர்மன். இவர் காலம் முழுமையும் போரிலேயே கழிந்தது எனக் கொள்ளல் முடியாது. நீர்ப் பாசனத் துறையிலும், புதுச் சிற்றூர்கள் ஏற்படுத்துவதிலும் தன் காலத்தைக் கழித்தார் எனக் கொள்ளலாம். பல ஏரிகளும், கால்களும் இவர் காலத்தே வெட்டப் பட்டன. நீர் நிலைகள் சரிவர இல்லாவிடில் விளை பொருள்கள் விளையா என்பது உனக்குத் தெரியுமே! ஆற்று நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளவும் நீர் நிலைகள் பெரிதும் பயன்பட்டன. திருச்சிராப் பள்ளிக்கருகே யுள்ள வைரமேகன் வாய்க்கால் இவர் காலத்தில் வெட்டப் பட்டதே. செங்கல்பட்டு மாவட்டத்தில் உத்திர மேரூர் எனும் ஊர் அருகே உள்ள வைரமேகத் தடாகம் எனும் ஏரி இவர் காலத்தில் வெட்டப் பட்டதே, இவருடைய ஒன்பதாவது ஆட்சி ஆண்டில் இந்த ஏரி வெட்டப் பட்டது. இவரது ஆட்சியின் கீழ்ப் பெரும் பதவி வகித்தவர்கள் பலர் ஏரிகள் வெட்டி யுள்ளார்கள். பல பழைய ஏரிகளைச் செப்பனிட்டுப் புதுப்பித்துள்ளார்கள்.

இவர் பெரும் சிற்ப அற்புதங்கள் நிறைந்த கோயில் திருப்பணிகள் ஏதும் செய்யவில்லை. இரண்டாம் தந்திவர்மனுக்குப் பிறகு சிற்பக் கலையின் திறமையைப் பல்லவர்களின் கோயில் அமைப்பில் காண முடியவில்லை என்றாலும் கருங்கற் கோயில்கள் ஆங்காங்கே எழுந்தன. மலையடிப் பட்டியில் குடைவரைக் கோயில் ஒன்றை தந்திவர்மன் அமைத்தார். தந்திவர்ம மங்கலம் எனும் தன் பெயர் கொண்ட ஊரில் கைலாய நாதர் கோயில் ஒன்றை எடுப்பித்தார். காஞ்சியிலுள்ள வைகுண்டப்

பெருமாள் கோயிலுக்குப் பொற்குடம் ஒன்றைக் காணிக்கையாக அளித்தார்.

இவருடைய பட்டத்தரசியார் பெயர் அக்களநிம்மதி. அவள் மூன்றும் நந்திவர்மனைப் பெற்றெடுத்தாள். மூன்றும் நந்திவர்மன் வரலாற்றிலும், இலக்கியத்திலும் பெயர் பெற்றவர். நந்திக் கலம்பகம் எனும் இலக்கிய நூல் இவர் காலத்தே இயற்றப் பட்டது. கலம்பகம் என்பது பிரபந்தங்களுள் ஒருவகை. செய்யுளின் கடைசி வரியின் கடைசிச் சொல்லும், மறு செய்யுளின் முதல் சொல்லும் ஒன்ருக இருக்கும். உதாரணமாக நந்திக் கலம்பகப் பாடலொன்றைச் சொல்கிறேன்:

ஊசல் மறந்தாலும் ஒண்கழல் அம்மானை
வீசல் மறந்தாலும் மெல்லிய லென்பேதை
பூசல் இலங்கிலேவேல் பொற்கழல் நந்திநின்
பாசிலே யந்தொண்டை யல்லது பாடாளே

பாடிய நாவலரோ வேந்தரோ பல் புரவிப்
பீடியன் மாகளிற்ருர் பிச்சத்தார்—கூடார்
படையாறு சாயப் பழையாறு வென்ருன்
கடையாறு போந்தார் கலந்து.

பாடப் பெறும் மன்னரின் வெற்றியையும், புகழையும் பாடல்களின் பல இடங்களில் காணலாம். அகத்துறை இன்பம் நிறைந்து காணப்படும். மொத்தம் 90 பாடல்கள் நிறைந்தது கலம்பகம்.

நந்திக் கலம்பகத்துப் பாடல்களைக் கொண்டுதான் மூன்ரும் நந்திவர்மனைப் பற்றிப் பல செய்திகளை அறிந்து

கொள்ள முடிகிறது. நந்திவர்மன் அடைந்த வெற்றிகள் பாடல்களில் காணப்படுகின்றன. புள்ளலூர், மணி மங்கலம், நெய்வேலி போன்ற பல்லவ வரலாற்றிலே அழியாப் பெயர் பெற்ற போர்க்களங்களைப் போன்று 'தெள்ளாறு' எனும் ஊர் சரித்திரத்திலும், இலக்கியத் திலும் முக்கிய மடைந்தது. 'தெள்ளாறு' எனும் ஊர் இப்போதும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வந்தவாசி தாலுகாவில் காஞ்சிக்குச் சுமார் பத்து மைல் தொலைவில் உள்ளது. சிற்றூராய்த் திகழ்கிறது.

ஒரு காலத்தில் பாண்டிய மன்னர் தெள்ளாறுவரை உட் புகுந்து விட்டார். மூன்றும் நந்தி வர்மன் தன் வீர தீர பராக்கிரமச் செயல்களால் தெள்ளாற்றில் கடும்போர் புரிந்து வெற்றி கொண்டார். மூவேந்தர்கள் வந்து தெள்ளாற்றில் எதிர்த்தார்கள் என்று பாடல்கள் கூறு கின்றன. பாண்டிய மன்னரைத் தெள்ளாற்றில் வென்ற தோடு நிற்காமல் வைகைக் கரை வரை அவரைத் துரத்திச் சென்று மாபெரும் வெற்றி பெற்றார். இடையில் வெள் ளாறு, பழையாறை எனும் இடங்களிலும் போர் நடை பெற்றிருக்கின்றன.

தோற்ற பாண்டிய மன்னர் நந்தி வர்மனுடன் சமா தானம் செய்து கொண்டார். அன்று தொட்டு அவர்கள் நட்பினராயினர். பாண்டியன் தன் மகள் மாறன் பாவை யாரை நந்திவர்மனுக்கு மணம் செய்வித்தார். நந்தி வர்மனுக்குச் சங்கை எனும் மற்றொரு மனைவி உண்டு. அவள் இராட்டிர கூட மன்னர் அமோக வர்ஷனின் மகள். இராட்டிர கூட மன்னரும் நந்தி வர்மனுடன் போரிட்டிருக்கிறார். குறுக்கோடு எனும் ஊரில் நந்தி

வர்மர் அவரை வென்ருர். போர்க்களப் பரிசுதான் சங்கை. அந்தப் பரிசுடன் பாண்டியனே எதிர்த்துப் போரிட்ட போது உடனிருந்து உதவியுள்ளார் இரட்டர் மன்னன். தம்பி! நீ நந்திக் கலம்பகத்தைப் படித்தா யாளுல் இந்தப் போர் விவரங்கள் தெள்ளத் தெளியும்.

மூன்ரும் நந்தி வர்மனுடைய நாட்டின் எல்லே வடக்கே வேங்கடம், தெற்கே காவிரியாறு. அதனுல் தான் 'வடவேங்கட நாடுடைய மன்னர் பிரான்' என்றும், 'காவிரி வளநாடன்' என்றும் நந்திக் கலம்பகம் புகழ்கிறது. இவர் காலத்தே சமயக் குரவர் நால்வருள் ஒருவரான சுந்தர மூர்த்தி நாயனுர் வாழ்ந்தார். அச்சமயம் சேர நாட்டில் பெருமாக் கோதையார் எனும் சேரமான் பெரு மாள் நாயனுர் வாழ்ந்து வந்தார். அவர் சுந்தரன் நண்பர். சுந்தரர் அவர் ஆண்டு வந்த சேர நாட்டிற்குச் சென் றிருக்கிருர்.

பல்லவ நாட்டில் அப்போது சிற்றரசர் பலர் ஆண்டு வந்தனர். அவர்களுள் ஒருவர் நரசிங்க முனேயரையர். அவரையும் சுந்தரர் தம் பாடலில் போற்றிப் பாடி யுள்ளார். கழற்சிங்கர் எனும் அரசரையும் சுந்தரர் புகழ்ந்து பாடியுள்ளார். கழற்சிங்கர்தான் மூன்ரும் நந்தி வர்மன் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

மூன்ரும் நந்தி வர்மன் தமிழ்ப்பற்று மிக்கவர். இவர் காலத்தில் இலக்கியம் வளர்ந்தது. பாரத வெண்பா எனும் நூல் இயற்றப் பட்டது. நந்திக் கலம்பகம் பாடப் பட்டது. சுந்தரர் பல தீஞ்சுவைப் பாடல்களேப் பாடினுர்.

மூன்றும் நந்தி வர்மனுடைய கல் வெட்டுக்கள் சோழ நாட்டில் பல கோயில்களிலும் நிறைந்துள்ளன. தமிழில் எழுதப்பட்டுள்ள அக்கல்வெட்டுக்கள் நந்தி வர்மன் அளித்த தானங்களின் விபரங்களைக் கூறுகின்றன.

இனி, பல்லவர்களின் முடிவு காலத்தைச் சொல்ல வேண்டிய கட்டத்திற்கு வருகிறேன். தம்பி! மூன்றும் நந்தி வர்மனுக்குப் பிறகு ஏறத்தாழ முப்பதாண்டுகள் பல்லவர்கள் ஆட்சி நிலவி வந்தது. மூன்றும் நந்தி வர்மனுக்குப் பிறகு அவர் மகன் நிருபதுங்க வர்மன் பட்ட மேறினர். இராட்டிர கூட இளவரசியான சங்காவை மூன்றும் நந்திவர்மன் மணந்திருந்த செய்தியை முன்னர் கூறினேனன்றோ, அவளுக்குப் பிறந்தவர் நிருப துங்க வர்மன். நிருபதுங்க வர்மன் காலத்திலேயே சோழர்கள் தலை தூக்கத்தொடங்கி விட்டனர். விஜயாலய சோழன் என்பவர் முத்தரையர்களை வென்று சோழ நாட்டைச் சற்று விரிவு படுத்தி இருந்தார்.

தெற்கே பாண்டிய நாட்டை இரண்டாம் வரகுணன் எனும் மன்னர் ஆண்டு வந்தார். முன்பு மூன்றும் நந்தி வர்மனிடம் வரகுண பாண்டியனுடைய தந்தை சீமாறன் தோற்றோடி விட்டார் அல்லவா? அந்தப் பழியை நீக்க இரண்டாம் வரகுணன் பெரும் படையுடன் வந்தார். அப்போது நிருபதுங்க வர்மன் முதுமை யடைந்திருந்தார். அதனுல் அவரது மகன் அபராஜிதனே தக்க படைகளுடன் சென்றுர். வளரும் சோழ நாட்டு அரசர் விஜயாலயனும், அவர் மகன் ஆதித்த சோழனும் பல்லவர்களுடன் சேர்ந் தனர்.

அவர்கள் சேர்ந்திராது இருக்க முடியாது. பல்லவர்களைப் பாண்டியர்கள் வென்று விட்டால் சிறிய நாடான-இடை நாடான-சோழர்களுக்கு மிக்க அபாயம். அரிசில் ஆறு எனும் ஆறு கும்பகோணத் தருகே ஓடுகிறது. அந்த ஆற்றங் கரையில் பெரும் போர் நடந்தது. பிறகு திருப்புறம்பியம் எனும் ஊரருகே பெரும் போர் நடை பெற்றது.

சில போர்கள் நாட்டுச் சரித்திரத்தையே மாற்றும் திருப்பு முனையாகத் திகழ்வதை நீ சரித்திரத்தில் காணலாம். அந்த ஊர்களின் பெயர்களை நினைவில் கொள்ளுவது முக்கியமான தொன்று. திருப்புறம்பியம் போர் பாண்டியர்களைத் தலையெடுக்க விடாமல் செய்தது. சோழர்களின் வாழ்வில் புது யுகத்தை ஏற்படுத்தியது.

பல்லவர்களுக்கு உதவிய ஆதித்த சோழன் அந்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டு கையகலமிருந்த சோழ நாட்டை விரிவு படுத்தினர். நட்பு கொண்டிருந்த அபராஜிதனுடன் போர் தொடுத்தார். மிக விரைவிலே தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினர். அறு நூறு ஆண்டுகளாக மறைந்திருந்த சோழ நாடு உதயமாயிற்று. போரிலே அபராஜிதன் கொல்லப் பட்டார். தொண்டை மண்டலங் கூடிய பல்லவ நாடு சோழ நாட்டில் கலந்தது.

அபராஜித வர்மர் காலத்துடன் பல்லவ ஆட்சி முடிவுற்றுலும் அபராஜித வர்மன் செய்த சிற்பப் பணிகள் இன்றளவும் அழியாதிருக்கின்றன. திருவொற்றியூர் கோயிலிலுள்ள கல் வெட்டு அக் கோயிலுக்குச் செய்த திருப்பணிகளைக் கூறுகிறது. திருத்தணிக்கு அருகேயுள்ள சிவன் கோயில் அபராஜித வர்மனல் எடுக்கப் பட்டது.

இப்படியாகக் காஞ்சியில் சிம்ம விஷ்ணுவினுல் பெருமையுடன் வளர்க்கப்பட்ட பல்லவ ஆட்சி அபராஜித வர்மனுடன் முடிவுற்றது. அவருக்குப் பிறகு அவர் பரம்பரையில் வந்த சிலர் சோழராட்சியில் படைத் தலைவ ராகவும், அரண்மனையில் முக்கிய பொறுப் பேற்றும் வாழ்ந்தனர். அவர்கள் நிலை எப்படியாயினும் காஞ்சிக் காவலர் படைத்த சிற்பமும், சித்திரமும், இலக்கியமும் இன்றளவும் அழியாது அவர்கள் பெருமையைப் பறை சாற்றுகின்றன.

மாமல்லபுரம் சென்ருல் காஞ்சி அரசர்களின் பெருமை நினைவுக்கு வருகிறது. காஞ்சிமா நகர் சென் ருல் பல்லவ மன்னர்களின் சிறப்பு கண் முன்னே தோன்று கிறது. எங்கும் நிறைந்து கிடக்கும் மலையில் குடையப் பட்ட மண்டபங்கள் அவர்கள் திறமைக்குச் சாட்சி கூறு கின்றன. சுந்தரரும், திருமங்கை ஆழ்வாரும், அப்பரும், சம்பந்தரும் பல்லவர்கள் உயர்வைக் கூறும் உயர்ந்த வர்கள் !

தம்பி! சிம்மவிஷ்ணுவின் காலத்திலிருந்து கடைசி மன்னர் அபராஜிதவர்மர் காலம் வரை ஏறத்தாழ மூந் நூறு ஆண்டுகள் பல்லவர்களுடைய ஆட்சி நிலைத்திருந்தது. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அந்தக் காவ லர்கள் கலைகளை வளர்த்ததால் மட்டும் பெருமை பெற வில்லை. அவர்கள் சிறந்து ஆண்டதால் இன்றளவும் அழி யாப் புகழைப் பெற்றிருக்கிருர்கள்.

காவலன் சரியாகக் காக்காவிடில் பசுவின் பலன் குறைந்து விடும். அறு தொழிலோர் தாங்கள் செய்யும் நூலினை மறந்துவிடுவர் என்று திருவள்ளுவர்

கூறியிருக்கிறார். ஆட்சி முறை சிறந்து விளங்க அவர்கள் பல திட்டங்களை வகுத்தனர்.

இப்பொழுது பஞ்சாயத்து என்று கூறுகிறோமே அதை அன்றே கண்ட பெருமை பல்லவர்களுக்கு உரியது. தொண்டை மண்டலம் பல்லவர்களிடம் வருவதற்கு முன்பே இருபத்திநான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பல்லவர்களும் அதைக் கைவிடாமல் கோட்டத்துத் தலைவரை மதித்தனர். கோட்டங்கள் நாடுகளாகவும், சிற்றூர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஓவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு சபை இருந்தது. சபையோர் அந்த ஊர் ஆட்சிக்குப் பொறுப்பாய் இருந்தார்கள். பெரிய நகரங்களில் வழக்குகளை விசாரித்து முடிவு கூற 'அறங்கூறு அவை'கள் இருந்தன.

அரசர் விசாரிக்கும் வழக்கு மன்றத்திற்குத் தருமாசனம் எனும் பெயர் உண்டு. பல்லவ ஆட்சியில் பொருள் காப்பவர்க்கு மாணிக்கப் பண்டாரம் என்று பெயர். அரசரின் உத்தரவை நிறைவேற்றுபவர்க்குக் கீழ்வாயில் கேட்போர் என்று பெயர். மன்னர்க்கு யோசனை கூற மந்திரி மண்டலத்தார் இருந்தனர். முதல் அமைச்சருக்கு அமாத்தியர் என்ற பெயர் உண்டு.

பல்லவ அரியணையை ஏற பரம்பரையில் வந்தவர்க்கு உரிமையுண்டு. அப்படி ஏதாவது மாறுதல் ஏற்படின் மந்திரி மண்டலத்தாரும், நகரத்து வணிகர்களும், கோட்டத்துத் தலைவர்களும், கடிகையின் தலைவர்களும் கூடி முடிவு செய்வார்கள். இரண்டாம் நந்திவர்மனைத் தேர்ந்தெடுக்க அப்படித்தான் பலரும் கூடி முடிவு செய்தனர்.

சிற்றூர்களும், பேரூர்களும் ஆட்சி நடத்த வரிவசூலிக்கும் உரிமை பெற்றிருந்தனர். 'செய்யும் தொழிலுக்கு ஏற்ப வரி வசூலித்தனர். வரிக்குக் 'காணம்' என்று பெயர் உண்டு. கல்லால் காணம், செங்கொடிக் காணம், கண்ணிட்டுக் காணம், குவளைக் காணம் போன்ற வரிகள் விதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. (கல்லால மரம் எனும் செடி பயிரிடுவதற்கு வரி, செங்கொடி, கருசராங்கண்ணி எனும் மருந்துச் செடிகளுக்கு வரி, குவளை மலர் பயிரிட வரி.)

உப்பெடுத்தலும், சர்க்கரை செய்தலும் அரசாங்கத்தின் உரிமையாக இருந்து வந்தன, இவற்றைத் தவிர கொல்லர், வண்ணார், தட்டார், நூல்நூற்பவர், ஆடை நெய்வோர் போன்று தொழில் செய்வோர்க்குத் தொழில் வரி விதிக்கப்பட்டிருந்தது.

பயிர்த் தொழில் சிறப்பாக நடைபெற ஆங்காங்கே ஏரி, குளம் முதலியவை ஏராளமாகப் பல்லவ மன்னர்கள் வெட்டியிருந்தனர். அவ்வப்போது ஏரிகளைப் பழுது பார்க்கும் பொறுப்பு ஊர் அவையாரிடம் விடப்பட்டிருந்தது. 'ஏரிவாரியப் பெருமக்கள்' எனப்பட்டனர். அதை மேற்பார்வை பார்த்தவர். நிறுத்தல் அளவை, முகத்தல் அளவைகளைப் பண்டங்கள் விற்போர் அரசாங்க முத்திரை பெற்றிருக்க வேண்டும்.

பல்லவர்களின் அடையாளமான நந்தியின் முத்திரை இடப்பட்ட பொன், வெள்ளி நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன.

பல்லவர்கள் கால ஆட்சியில் பலமுறைகள் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் பல்லவ மன்னர்

கள் கூடியவரையில் முன் எச்சரிக்கையர்கப் பஞ்ச காலத்தில் உதவுவதற்காக ஒவ்வொரு ஊரிலும் 'பஞ்சவார வாரியம்' எனும் பெயரில் தானியங்கள் சேமித்து வைத்திருந்ததால் பஞ்சத்தை எளிதில் வென்றனர்.

பல்லவர்கள் கோயில்களைக் கட்டியதுடன், அந்தக் கோயில்களில் பூசை முதலியன நடைபெறவும் வழிவகுத்தனர். ஒவ்வொரு கோயிலுக்கும் இறையிலியாக நிலங்கள் விடப்பட்டன. அவற்றினின்று வரும் வருவாயைக் கொண்டு கோயில் பூசை சிறப்பாக நடைபெற்றது. இவற்றைத் தவிர மன்னர்கள் அவ்வப்போது பொன்னுபரணங்கள், விளக்கெரிக்கும் நெய் பெற ஆடுமாடுகள் முதலியன இனமாக அளித்தார்கள்.

மறையவர் அமைதியாகவாழ சிற்றூர்களை தேவதானமாகப் பல்லவர்கள் அளித்திருந்தனர். சதுர்வேதிமங்கலம் என அவை பெயர் பெற்றன.

பல்லவர்கள் குறிப்பிட்ட ஒரே மதத்தைச் சார்ந்து இருந்து மற்ற மதங்களை வெறுத்தாரில்லை. சைவமும், வைணவமும், சமணமும், பௌத்தமும் தழைத்தோங்கியிருந்தன. காஞ்சி நகரில் சமணப் பள்ளிகளும், பௌத்த மடங்களும் இருந்தன. சைவ மதத்திலும் பல பிரிவுகள் இருந்தன. மடங்களில் துறவிகள் இருந்ததுடன் கல்வி, கேள்விகளில் சிறக்க மாணவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தனர். காஞ்சிமாநகரில் இருந்த 'கடிகை'களிலும், கல்விச்சாலைகளிலும் வடக்கே பல நாடுகளிலிருந்து வந்து கல்வி கற்றதாகச் செப்பேடுகள் கூறுகின்றன.

ஆக, காஞ்சிக் காவலர்கள் தங்கள் நாடு செழிக்கச் சிறந்த முறையில் ஆட்சிபுரிந்தனர். நல்லாட்சியில் மக்கள்

களிப்புடன் வாழ்ந்தனர். எத்தனையோ போர் வரினும் மக்கள் அஞ்சாது இருந்தனர். நல்லாட்சியும் நல்ல மக்களும் கூடியிருந்து பல்லவ நாட்டை வளர்த்தனர். அப்படி அவர்கள் சிறப்பாக வளர்த்ததால்தான் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் பல்லவர்கள் புகழை மனமாரப் போற்றிப் புகழ்கிறோம். தம்பி! இன்னும் நீ பெரியவனாக ஆனபிறகு பல்லவர்களின் சரித்திரத்தை ஆராய்ந்து அவர்கள் பெருமையை மேலும் உணர்வாய் என்று நம்புகிறேன்.



# செல்வி பதிப்பகப் புத்தகங்கள்



படிக்கப் பயன் தரும்
பயிலச் சுவை தரும்

105

புதிய புத்தகங்கள்

---

## ஹர்ஷர் இயற்றிய நாடகக் காப்பியங்கள்

தமிழில்:

| | |
|---|---|
| அரதனமாலை | பண்டித மு. முத்துவேங்கடாசலம் |
| நாகானந்தம் | ,, |
| பிரிய தரிசிகா | ,, |

---

| | |
|---|---|
| அம்பிகை அழகின் அலைகள் (சௌந்தர்ய லஹரி) | ,, |
| சிவானந்த அலைகள் (சிவானந்த லஹரி) | ,, |
| உயிரூட்டும் தண்ணீர் | வள்ளிசிவம் |
| நாட்டுப்புற நம்பிக்கைகள் | தேவகோட்டை பி. நாராயணன் |
| தாகூரின் கவிதை, சிறுகதை, நாடகம் | V R M செட்டியார் |

---

## செல்வி பதிப்பகம்

புத்தகம் வெளியிடுவோர்
விற்பனையாளர்
காரைக்குடி-623 001.